பக்கங்கள் – 16
விலை – ரூபா 50
Registered as a Newspaper
# உதயன்
புதன்பொய்கை
சுடர் : 40
கதிர் : 43
புதன்கிழமை
08 ஜனவரி 2025
மார்கழி 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

வவுனியாவில் 2024இல் 113 பேருக்கு டெங்கு
» 15

புதிய அரசியலமைப்பு உருவாக்கம்

## தமிழ்த்தேசியத் தரப்புகள் ஜன. 25 ஆம் திகதி பேச்சு!

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

**கொழும்பு, ஜனவரி 8**

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் தமிழ்த்தேசியத் தரப்புகள் வடக்கு அல்லது கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.
15


அரசாங்க நிதி தொடர்பான குழு, அதன் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையில் நேற்று கூடியது. (தொடர்புடைய செய்தி பக்கம் 02) (அ-ம-இ)

## வடக்கு மார்க்கத்துக்கு 2 ரயில் இயந்திரங்கள்
» 15

யாழ். நகரப் பகுதியில்

## இளைஞர் மீது தாக்குதல்: மேலும் மூவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜன. 8
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் புத்தாண்டுக்கு முதல்நாள் இரவு இளைஞர் ஒருவர் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், இந்தச் சம்பவத்துடன்
13

வடக்கு மாகாணத்தில்

## சுண்ணக்கல் அகழ்வுக்கு அனுமதிக்க வேண்டாம்!

உடனடியாக நிறுத்துமாறு வடக்கு ஆளுநர் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜன. 8
வடக்கு மாகாணத்தில் சுண்ணக்கல் அகழ்வுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதை உடன் நிறுத்துமாறு
15

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை

## கைவிடப்பட்ட திட்டங்கள் மீண்டும் நடைமுறையாகும்



பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 8
அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற திட்டத்தின் கீழ், இடைநடுவில் கைவிடப்பட்ட திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்படும் என்று
15

## மத்திய வங்கியின் ஆளுநருக்கு சிறந்த இலங்கையர் விருது!

கொழும்பு, ஜன. 8
இலங்கையின் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவுக்கு சிறந்த இலங்கையருக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.
13

சுண்ணக்கல் விவகாரம்

## பாரவூர்தியும் கற்களும் பிணைமுறியில் விடுவிப்பு

மாதிரி பகுப்பாய்வு செய்யவும் அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 8
தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனால், சாவகச்சேரிப் பகுதியில் வைத்து
15

## கடற்படையினரால் இன்று துப்பாக்கிச்சூட்டுப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜன. 8
பருத்தித்துறைக் கடற்பரப்பில், கடற்படையினர் இன்று துப்பாக்கிச்சூட்டுப் பயிற்சியை மேற்கொள்ளவுள்ளனர். எனவே, மீனவர்கள் அந்தப் பகுதிக்குள் பிரவேசிக்கவேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.
15

யாழ்ப்பாணம் - சென்னை

## விமானக் கட்டணம் மும்மடங்கு உயர்வு

ஐயப்ப பக்தர்களின் அதிகரிப்பே காரணமா?

யாழ்ப்பாணம், ஜன. 8
ஐயப்ப பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் யாழ்ப்பாணம் - சென்னை இடையிலான விமானசேவைக் கட்டணம் மூன்று மடங்குக்கும் மேலாக அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்று வாரங்களுக்கு
15




'இருமுடி சுமக்கிற பக்தர்களை வைச்சே இப்பிடி மும்மடங்கு லாபம் பாக்கிறது அடுக்குமோ?'

உள்ளூராட்சித் தேர்தல்

## தேர்தல் சட்டத்தில் திருத்தம்; வெளியிடப்பட்டது வர்த்தமானி

கொழும்பு, ஜன. 8
உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.
2023ஆம் ஆண்டின் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை ரத்துச்செய்து புதிய வேட்புமனுக்களைக் கோரும்வகையில் இந்தச் சட்டமூலம் மாற்றியமைக்கப்படவுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல், பொதுநிர்வாகம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரின் உத்தரவுக்கமைய வெளியிடப்பட்டுள்ளது.
இதற்கமைய, 2023ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் ரத்துச் செய்யப்படவுள்ளன. அத்துடன், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் செலுத்திய
15

சீனாவின் மாநிலமே

## தாய்வான்!

சீனப் பயணத்துக்கு முன்பாக அநுர அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 8
தாய்வான் என்பது சீனாவின் ஒரு மாநிலம். அது தனிநாடு அல்ல என்று ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான குழுவினர் எதிர்வரும் 14ஆம் திகதி சீனாவுக்குச்
15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரஷ்யப்படையில் தமிழ் இளைஞர்கள்

# உயர்மட்டப் பேச்சுக்கு தயாராகும் அரசாங்கம்

**கொழும்பு, ஜன. 8**

**ரஷ்யப்படையில் வடக்கின் தமிழ் இளைஞர்கள் வலிந்து இணைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் விரைவில் உயர்மட்டப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.**

ரஷ்யப் போரில் பலவந்தமாக இணைக்கப்பட்டுள்ளவர்களை மீட்டுத்தருமாறு அவர்களது உறவினர்கள் நேற்று கொழும்பிலுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திராவுக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே கலந்துரையாடல் வெளிவிவகார அமைச்சின் பிரதி அமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போதே வடக்கின் தமிழ் இளைஞர்கள் மற்றும் ஏனைய இலங்கையர்கள் போரில் ஈடுபடுத்தப்படுகின்றமை குறித்து ரஷ்ய வெளிவிவகார அமைச்சருடன், அமைச்சர் விஜித ஹேரத் விரைவில் உத்தியோகபூர்வமான பேச்சுகளை முன்னெடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

அத்துடன், குறித்த முகவர்கள் தொடர்பில் குற்றவியல் விசாரணையொன்றை முன்னெடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் பிரதியமைச்சர் கூறியுள்ளார். (ச-இ)

## றொஹிங்ய அகதிகளை நாடு கடத்தக்கூடாது

### சஜித் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 8

இலங்கையில் தஞ்சமடைந்துள்ள றொஹிங்ய புகலிடக்கோரிக்கையாளர்களை நாடு கடத்தும் முயற்சியை அரசாங்கம் உடன் கைவிடவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மியான்மரில் இருந்து றொஹிங்ய புகலிடக்கோரிக்கையாளர்கள் சிலர் அண்மையில் முல்லைத்தீவில் கரையொதுங்கியுள்ளனர். அவர்களை மீண்டும் நாடு கடத்துவதற்குரிய திட்டத்தை செயற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது.

இவ்வாறான மனிதாபிமானமற்ற செயலில் ஈடுபடவேண்டாம் என அரசாங்கத்திடம் கோருகின்றேன். அவர்களை மீளத் திருப்பி அனுப்புவது மனித உரிமை மீறலாகும். சர்வதேச மனிதாபிமானச்சட்டங்களை மீறும் செயலாகும். றொஹிங்ய மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்பவர்கள். சர்வதேச சமவாயங்கள் உள்ளன. மனிதாபிமானச் சட்டங்கள் உள்ளன. அவற்றின் பிரகாரமே நாம் செயற்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## ஐந்து நாடுகளுக்கான தூதுவர்கள் நியமனம்

கொழும்பு, ஜன. 8

வெளிநாட்டு இராஜதந்திர சேவைக்கென ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் 4 தூதுவர்களையும் உயர்ஸ்தானிகர் ஒருவரையும் நியமிக்கும் நிகழ்வு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

அதன்படி கட்டார் நாட்டின் தூதுவராக ஆர்.எஸ்.கான் அசாத், ரஷ்யத் தூதுவராக திருமதி எஸ்.கே. குணசேகர , குவைத் தூதுவராக எல்.பி.ரத்நாயக்க, எகிப்தியத் தூதுவராக ஏ.எஸ்.கே.செனவிரத்ன நியூஸிலாந்து உயர்ஸ்தானிகராக டபிள்யூ.ஜீ.எஸ். பிரசன்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

கட்டுநாயக்கவில் பனிமூட்டம்

## தரையிறங்காது திரும்பிய நான்கு விமானங்கள்

கொழும்பு, ஜன. 8

கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்க வந்த நான்கு விமானங்கள், மத்தள மற்றும் இந்தியாவின் திருவனந்தபுரம் விமான நிலையங்களுக்குத் திருப்பிவிடப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை கட்டுநாயக்கப் பிரதேசத்தில் நிலவிய பனிமூட்டமான காலநிலை காரணமாகவே இவ்வாறு திருப்பிவிடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## ஏலத்துக்கு வரும் அரச வாகனங்கள்

கொழும்பு, ஜன. 8

அரச வர்த்தக மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் உட்பட அனைத்து அரச நிறுவனங்களிலும் உள்ள பயன்பாட்டுக்குத் தேவையில்லாத அதிசொகுசு வாகனங்களை ஏலம் விடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன, அமைச்சின் செயலாளர்கள் உட்பட அனைத்து அரச திணைக்களங்களும் சொகுசு வாகனங்களின் அதிக எதிர்த்திறன் மற்றும் வருமான விவர அறிக்கையை வரும் மார்ச் முதலாம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவேண்டும் எனச் சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஏலம் விடப்படும் வாகனங்களை எந்த அரசு நிறுவனமும் வாங்கக்கூடாது என்றும் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ச-இ)



## பதிவில்லாத மருந்தகங்கள்; சட்டம் பாயும்

கொழும்பு, ஜன. 8

இலங்கை மருத்துவசபையின் கீழ் பதிவு செய்யாத மருத்துவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கத் தயார் என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பல மருத்துவமுறைகள் நடைமுறையில் உள்ளன. அந்த மருத்துவர்கள் இலங்கை மருத்துவசபையில் பதிவு செய்திருக்கவேண்டும்.

பதிவு செய்யாத மருத்துவர்கள் இருந்தால் தெரிவிக்கவும். இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கத் தயார் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-இ)



ஈஸ்டர் தாக்குதல்

## 747 பேர் இதுவரை கைது

கொழும்பு, ஜன. 8

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி இதுவரை 747 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்றில் 14 வழக்குகளின் கீழ் 100 சந்தேகநபர்களுக்கு எதிராகச் சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளார்.

சனல் - 4 ஊடாக வெளியான விடயங்கள் மற்றும் அதற்குப் புறம்பான விசாரணைகளின்போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் அடிப்படையில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படும். வெளிப்படுத்தப்படும் உண்மைகளின் அடிப்படையில் மேலதிக சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ச-இ)

## கோப் குழுவுக்கு உறுப்பினர்கள் நியமனம்

கொழும்பு, ஜன. 8

இலங்கையின் 10 ஆவது நாடாளுமன்றத்தின் பொதுநிதி தொடர்பான குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சத்துரங்க அபேசிங்க, சாணக்கியன் ராசமாணிக்கம், கௌசல்யா ஆரியரத்ன மற்றும் ஆர்கம் இல்யாஸ் ஆகியோர் புதிய கோப் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

2025 ஆம் ஆண்டுக்கான முதலாவது நாடாளுமன்ற அமர்வு நேற்று ஆரம்பமான வேளையில் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன இந்த அறிவிப்பை வெளியிட்டார். பொதுநிதி தொடர்பான குழுவின் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா முன்னதாக நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எழுதுமட்டுவாளில் சோதனைச்சாவடி

யாழ்ப்பாணம், ஜன. 8

**சா**வகச்சேரி எழுதுமட்டுவாள் சந்தியில் மீண்டும் பொலிஸ் சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

பொதுத்தேர்தல் காலத்தில் ஜனாதிபதியின் யாழ். வருகையையிட்டு இந்தச் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டிருந்தன.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் தொடக்கம் மீண்டும் சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டு பொலிஸார் தொடர்ந்து காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக மணலகழ்வு உள்ளிட்ட சட்டவிரோதக் கடத்தல் செயற்பாடுகள் அதிகரித்த நிலையில் அவற்றைத் தடுக்கும் முகமாக அவை மீள அமைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-25-9)



## டிஜிற்றல் அ. அட்டையை இந்தியாவில் அச்சிடாதீர்!

*மக்கள் போராட்ட இயக்கம் தெரிவிப்பு!*

கொழும்பு, ஜன. 8

டிஜிற்றல் தேசிய அடையாள அட்டை அச்சிடும் பணியை இந்திய நிறுவனத்துக்கு வழங்குவதற்கு மக்கள் போராட்ட இயக்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மக்கள் போராட்ட இயக்கம் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், இறைமையுள்ள ஒரு நாட்டுப் பிரஜையின் விவரங்களை இன்னொரு நாடு இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்கு இது வழிவகுக்கும். இந்தத் திட்டத்தை உடனடியாக மீளப்பெறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-22,6)

## பொலிஸ் தலைமையக கமராக்கள் 'அபேஸ்'

கொழும்பு, ஜன. 8

பொலிஸ் தலைமையகத்தை இடமாற்றம் செய்தபோது ஏழு கண்காணிப்புக் கமராக்கள் காணாமற்போனமை தொடர்பில் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

பொலிஸ் தலைமையகம் அண்மையில் கொழும்புக் கோட்டையிலிருந்து கொம்பனித்தெருவில் உள்ள விமானப்படைத் தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. கொழும்புக் கோட்டை அலுவலகப் பொருள் பதிவேட்டிலிருந்த ஏழு கண்காணிப்புக் கமராக்கள் இடமாற்றத்தின் பின் புதிய அலுவலகப் பொருள் பதிவேட்டில் பதியப்படவில்லை. இதுதொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (ச-22, 6)

## கஞ்சா கடத்தல் இருவர் கைது!

கிளிநொச்சியில் இருந்து வவுனியாவுக்கு மோட்டார் சைக்கிளில் கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் பெண் உட்பட இருவர் ஓமந்தைப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். வவுனியா, ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 700 கிராம் கஞ்சாவும் இரண்டு இலட்சத்து 72 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளன. (ச-18)

## சந்தைக் கழிவுகளை உரியமுறையில் அகற்றுக

*மக்கள் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ்ப்பாணம் - குருநகர் சின்னக்கடை சந்தைக் கழிவுகளை யாழ். மாநகரசபை உரிய முறையில் அகற்றுவதில்லை என அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

சந்தைக் கழிவுகள் சுத்திகரிக்கப்பட்டு சந்தைக்கு வெளியே கொட்டப்படுகின்றன. நாள்கணக்கில் அவை அகற்றப்படாமல் தேங்குகின்றன.

இது தொடர்பில் யாழ். மாநகரசபை ஆணையாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, இது தொடர்பில் முறைப்பாடு கிடைத்துள்ளது. அதற்கமைய கழிவுகள் தற்போது அகற்றப்படுகின்றன. அத்துடன் அந்தப் பகுதியில் கண்காணிப்புக் கமரா பொருத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (ச-45-25)

*ஆர்ப்பாட்ட வழக்கு*

## ஜோசப் ஸ்டாலின் உட்பட 33 பேருக்கும் விடுதலை

கொழும்பு, ஜன. 8

சேர். ஜோன். கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்ட வரைவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த வழக்கில் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உட்பட 33 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

2021ஆம் ஆண்டு ஜூலை 8ஆம் திகதி இந்தச் சட்ட மூலத்துக்கு எதிராக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், முன்னிலை சோஷலிசக்கட்சி, இலங்கை ஆசிரியர் சங்கம் என்பன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில், கொரோனாப் பாதுகாப்பு விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பு மேலதிக நீதிவான் மஞ்சுள பெர்னாண்டோ முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிவான் அனைவரையும் விடுதலை செய்தார். (ச-45-6)




**த**ட்டிக் கேக்க ஆளில்லாட்டி தம்பி சண்டப்பிரசண்டனாம். எல்லாத்தையும் தட்டிக்கேட்டவை இப்ப இல்லாததால் கண்டவன் நிண்டவன் எல்லாம் சண்டப்பிரசண்டர்களாமாறி, குட்டையையும் சனத்தையும் குழப்பி எல்லாத்தையும் நாறடிக்கினம். எதில கைவைச்சாலும் பொறுக்கலாம், ஆனால் மாவீரர்களின்ர தியாகத்தில கைவைக்கிறவையைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கேலாதுதானே.

சண்டை முடிஞ்ச பிறகு இஞ்சையுள்ள மாவீரர் துயிலுமில்லங்களுக்கு கிட்டவும் போகேலாது. சில துயிலுமில்லங்களை ஆமிக்காரர் தங்கட முகாம் ஆக்கியும் போட்டினம். மற்றத் துயிலுமில்லங்களுக்கு முன்னாலையும் எப்பவும் சென்றி போட்டிருந்தவை. நவம்பர் மாதமெண்டால் சென்றியை விடவும் கூட ஆமியை இறக்கி, அந்தப் பக்கம் ஆரும் காலடி வைச்சாலே கழுத்தைப் பிடிச்சு, விசாரிக்காமல் விடாயினம். ஏதும் டவுட் வந்தால் அவையளைப் பிடிச்சுக்கொண்டும் போயிருக்கிறாங்கள். அந்தப் பக்கம் காத்தடிச்சாலே கைது செய்யிற காலத்தில கூட, மாவீரர் நாளிலயும் அங்க துணிஞ்சு போய், விளக்கேத்தி அஞ்சலி செய்தவையும் இருக்கினம். இந்த ஒருசிலரைத் தவிர, மாவீரர் துயிலுமில்லங்களை ஏதென்று கேட்பாருமில்லை எடுத்துப் பிடிப்பாருமில்லை. அந்த ஒருசிலர் அப்பிடிப் பயப்பிடாமல் விளக்கேத்தினதாலதான் இப்ப முழுச்சனமும் மாவீரர் நாளுக்குப் போய் அஞ்சலி செய்யிற நிலைமை வந்தது. அதிலையும் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்துக்குத்தான் கூடச்சனம் போறது. இதால அரசாங்கத்துக்கு கடும் புகைச்சல். என்னதான் மாற்றம் மண்ணாங்கட்டி எண்டு கதைச்சாலும் அவையின்ர அடிமனதில எங்கட போராட்டத்துக்கு எதிரான நிலைப்பாடுதானே இருக்குது. எண்டாலும் தாங்கள் நேரடியா மாவீரர் நாளைக்குழப்பினால்தங்கட 'நல்லபிள்ளை'வேசம் கலைஞ்சு போடுமெண்டதால, மாவீரர் நாளைக் குழப்பிறதுக்கு தங்கட எடுபிடியளை வருசத் தொடக்கத்திலேயே களமிறக்கிட்டினமாம்.

அந்த எடுபிடியளும் வாற சனிக்கிழமை (11 ஆம் திகதி) கனகபுரம் துயிலுமில்லத்தில தாங்கள் ஒரு பணிக்குழுவை தெரிவு செய்யப்போறம் எண்டும், அதுக்கு ஆக்களை வரச்சொல்லியும் அறிவிச்சிருக்கினம். இத்தனைக்கும் அந்தத் துயிலுமில்லத்துக்கெண்டு ஒரு பணிக்குழு இருக்கு. ஒவ்வொரு வருசமும் அந்தப் பணிக்குழு கூடி, புது ஆக்களையும் உள்வாங்கி, மாவீரர்நாள் ஏற்பாடுகள் எல்லாத்தையும் செய்யிறது. இவ்வளவு வருசமும் ஒரு குறை, குற்றம் இல்லாமல் இயக்கத்தின்ர காலத்தைப் போல கனகபுரம் துயிலுமில்லத்திலையும் மாவீரர்நாள் நடக்குதெண்டால் அதுக்கு இந்தப் பணிக்குழுதான் காரணம். அவையிட்ட ஒண்டுமே சொல்லாமல், தாங்கள் நினைச்சபாட்டுக்கு இந்த எடுபிடியள் புதுப்பணிக்குழு அமைக்கிறம் எண்டு கொடிபிடிக்கத் தொடங்கியிருக்கினம். ஊர் ரண்டு பட்டால் மட்டுமில்லை, துயிலுமில்லங்கள் ரண்டு பட்டாலும் கூத்தாடிக்கு கொண்டாட்டம் தான். அந்தச் சூத்திரம் ஒண்டும் விளங்காமல், ஆரோ குடுத்த கயித்தை விழுங்கிப்போட்டு, இப்பிடி மாவீரர் துயிலுமில்லத்தையும், மாவீரர்களின்ர தியாகத்தையும் கூறுபோடவெண்டு வெளிக்கிட்டவைக்கு சனம் தான் நல்ல பாடம் படிப்பிக்கவேணும்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய

**மேடம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்குத் திடீர்ப்பயணம் மேற்கொள்ள நேரிடும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**இடபம்:** சிலருக்கு எதிர்பாராத வகையில் பணவரவுக்கும், புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டாகும். மாலையில் குடும்பத்தினருடன் உறவினர் வீட்டு சுபநிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**மிதுனம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையைக் கேட்டு நடப்பார்கள். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும்.

**கடகம்:** அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க வேண்டாம். உறவினர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அலுவலகத்தில் உங்கள் பணிகளை மற்றவர்களிடம் ஒப்படைக்காமல் நீங்களே செய்வது அவசியம்.

**சிம்மம்:** குடும்பத்தில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்பட்டாலும், ஒருவழியாகச் சமாளித்துவிடுவீர்கள். அக்கம்பக்கத்தில் உள்ளவர்களால் பிரச்சினை ஏற்பட்டாலும், பெரிதுபடுத்தாமல் பொறுமையாக இருப்பது நல்லது.

**கன்னி:** வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியும் ஆதாயமும் தருவதாக அமையும். அலுவலகத்தில் பணிச்சுமை சற்று அதிகரித்தாலும் சக பணியாளர்கள் உதவிசெய்வார்கள்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பீர்கள். சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். உறவினர்கள் மத்தியில் மரியாதை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அனுசரித்துச் செல்வது நல்லது. திடீர்ச் செலவுகள் ஏற்படும். தாய்மாமன் வழியில் ஆதாயம் கிடைக்கும்.

**தனுசு:** தாய்மாமன் வகையில் ஆதாயம் உண்டாகும். ஒரு சிலருக்கு புண்ணியத் தலங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உண்டாகும். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகை இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**மகரம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். நீண்டநாளாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள்.

**கும்பம்:** உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் முடிவதில் தடை, தாமதம் ஏற்படக்கூடும். திடீர்ச் செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்கும் சூழ்நிலையும் ஏற்படும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும்.

**மீனம்:** வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மாலையில் பள்ளி, கல்லூரிக் கால நண்பர்களைச் சந்தித்து மகிழும் வாய்ப்பு ஏற்படும்.



படங்கள் - ஐ.சிவசாந்தன்

படைத்தல் கடவுளான பிரமாவின் ஆணவம் நீங்கும் வண்ணம் அவரது ஐந்தாவது தலையை சிவபெருமான் கிள்ளி அகற்றி, நான்முகனாக்கிய நிகழ்வு பிரம சிரச்சேத உற்சவமாக நல்லூர் சிவன் கோவிலில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நிகழ்த்தப்பட்டது. (ச-25)

# காலாவதியான பொருள்கள் அங்காடிகளுக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஜன. 8

கோண்டாவில் பகுதிகளில் காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த இரண்டு பல்பொருள் அங்காடிகளுக்குத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப்பரிசோதகர்நிர்மலானந்தன் தலைமையிலான குழுவினர் கோண்டாவில் பகுதியிலுள்ள அங்காடிகளில் அண்மையில் சோதனை மேற்கொண்டனர். இதன்போது காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த இரண்டு பல்பொருள் அங்காடி உரிமையாளர்களுக்கெதிராக வழக்குப் பதிவுசெய்து நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் உரிமையாளர் ஒருவருக்கு 60ஆயிரம் ரூபா தண்டமும் மற்றைய உரிமையாளருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்துத் தீர்ப்பளித்ததுடன் கடுமையான எச்சரிக்கையும் விடுத்தார். (ச-26)

# கொடுப்பனவு விநியோகம்

சாவகச்சேரி, ஜன.8

தென்மராட்சிப் பிரதேசத்தில் மாதாந்த உதவிப்பணம், நோய்க்கொடுப்பனவு மற்றும் அங்கவீனமுற்றோருக்கான கொடுப்பனவு ஆகியவை அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் நேற்றுச்செவ்வாய்க்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்பட்டுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 9)

# திருவாசக முற்றோதல்

கிளிநொச்சி, ஜன.8

கிளிநொச்சி ஜெயந்திநகர், மகாதேவா ஆச்சிரமத்தில் திருவாசகமுற்றோதல்நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் சிவனடியார்களைப் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு நிர்வாக உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-25)

# உதயநாளும் பரிசுதினமும்

யாழ்ப்பாணம், ஜன.8

கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் உதயநாளும், பரிசுத்தினமும் வாழ்வகத்தின் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் வாழ்வகத்தின் செல்லா மண்டபத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.45 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்த டிசில்வா பங்கேற்கவுள்ளார். (ச-45-10)

# பட்டத்திருவிழா பொங்கலன்று

யாழ்ப்பாணம், ஜன. 8

வருடந்தோறும் நடத்தப்படும் வல்வெட்டித்துறைப் பட்டப்போட்டித் திருவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி பொங்கலன்று நடைபெறவுள்ளது.

இதற்கான முன்னாயத்தக் கலந்துரையாடல் வடமராட்சி வடக்குப் பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் வல்வெட்டித்துறை நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் பட்டத்திருவிழாவை கண்டுகளிக்க வருகின்ற பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாத வகையில் வீதிப்போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் போன்ற வசதிகளை ஒழுங்குபடுத்தல் தொடர்பாக பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (ச-22,125)



# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 8

பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் உறுப்பினர்களுக்கான வருடாந்த பொதுக்கூட்டம் நிலையத்தின் தலைவர் கி.மணிராஜ், செயலாளர் அ.சிவரூபன் அகியோரின் தலைமையில் நிலைய மண்டபத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

உறுப்பினர்கள் அனைவரையும் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-25, 10)

# அலைபேசி திருட்டு!

யாழ்ப்பாணம், ஜன.8

அச்சுவேலி மருத்துவமனை வீதியிலுள்ள வீடொன்றினுள் புகுந்த திருடன் கைபேசியைத் திருடிச்சென்றுள்ளான் என்று அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அதிகாலையில் இடம்பெற்றுள்ளது.

அதன்போது 40 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசியும், சிறுதொகைப் பணமும் திருடப்பட்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-45-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குமார் பொன்னம்பலம் வவுனியாவில் நினைவு


வவுனியா, ஜன.8
மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25 ஆவது நினைவுதினம் தமிழர்தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் கடந்த ஞாயிற்றுக் கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. வவுனியாவில் அவர்கள் போராட்டம் மேற்கொள்ளும் வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாகவுள்ள கொட்டகையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அவரது திருவுருவப் படத்துக்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர். (ச-110)

# பண்பாட்டுப் பாரம்பரியம் காக்க கலைஞர்களுக்கு இடமளிப்போம்

## ஓய்வுநிலை யாழ். மாவட்டச் செயலாளர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஜன.8**
**எமது மொழி , இன, மத, கலாசாரப் பண்பாடுகளை அழியாது பாதுகாப்பதற்கு கலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்து கலைஞர்களுக்கு இடமளிக்கவேண்டும். இதன்போதே கலைகளை சாகாவண்ணம் பாதுகாக்கமுடியும் என்று யாழ். மாவட்ட ஓய்வுநிலை மாவட்டச் செயலாளர் செல்லையா பத்மநாதன் தெரிவித்தார்.**

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற பண்பாட்டுப் பெருவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
அன்றைய காலத்தில் அரச அனுசரணை இன்றி கலைவிழாக்கள் அரச நிறுவனங்கள் அல்லாத அமைப்புகளால் பூர்த்திசெய்யப்பட்டன. இதன்போது கலைகள் சாகாவண்ணம் பாதுகாக்கப்பட்டன. இன்று கூத்துக்கள் அழிந்துவருகின்றன. அண்ணாவிமார் அருகிவிட்டனர். போரில் பல எழுத்துருக்கள் அழிந்துவிட்டன. கலைஞர்கள் இன்று மிகவும் குறைந்த வசதியுடன் அவலங்களை எதிர்கொள்கின்றனர்.
இஸ்ரேல் நாட்டில் போர்க்காலத்துக்குப் பின்னர் அந்த நாடு வளர்ச்சியடைவதற்குக் கலாசார விழுமியங்களைப் பேணிப்பாதுகாப்பதும் ஓர் அபிவிருத்தி எனக் குறிப்பிட்டு மொழி, இன, மதத்தைப் பாதுகாக்க மிகவும் சிறப்பாகக் கடமையாற்றினர். இன்று இஸ்ரேல் வளர்ந்துவிட்டது.
அன்றைய காலத்தில் யாழ். மாவட்டச் செயலரால் பௌர்ணமி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. கலைஞர்களுக்கு இடமளிக்கபட்டது.
ஆகவே தற்காலம் போர்க்காலம் போலன்றி கலை, கலாசாரப் பண்பாடுகளைப் பேணிப்பாதுகாக்க நல்வாய்ப்புகளை எமக்குத் தந்திருக்கின்றது. இதனை அனைவரும் பயன்படுத்த வேண்டும் - என்றார். (ச-125)



# தயாரிப்புகளின் அறிமுக நிகழ்வு


யாழ்ப்பாணம், ஜன.8
'த ரேட்ஸ் மைன்ஸ் குரூப் ஒவ் கொம்பனீஸ்' இன் தயாரிப்புகளின் பிறாண்டுகளான வைக்ஸ்போல் ஓட்டோ கெயார் மற்றும் மக் லூப்றிகன்ஸ் ஆகியவற்றை மாகாண மட்டத்தில் அறிமுகப்படுத்துவதற்கான நிகழ்வு தனியார் விருந்தினர் விடுதியொன்றில் கடந்த சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.
இதன்போது இரண்டு தயாரிப்புகள் தொடர்பிலும் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் ஆலோசகரால் விளக்கமளிக்கப்பட்டதோடு, வாடிக்கையாளர் கருத்துகளும் பதிவுசெய்யப்பட்டன.
தொடர்ந்து அதிகாரமளிக்கப்பட்ட வடமாகாணத்தின் வர்த்தகர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் நிர்வாக இயக்குநர் ந. கேதீஸ்வரன், நிதி ஆலோசகர் க. சுவாமிநாதன், வடமாகாணத்துக்கான உத்தியோகபூர்வ விநியோகஸ்தர் ஜி.அருள்ராஜ் மற்றும் வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-45-125)

# சிறைகளில் இடநெருக்கடி

கொழும்பு, ஜன.8
இலங்கையின் சிறைச்சாலைகளில் தற்போது அதிகூடுதலான கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதன் காரணமாக கடுமையான இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சிறு சிறு குற்றங்களில் ஈடுபட்டு விதிக்கப்படும் அபராதத் தொகையை செலுத்த வழியின்றி, செலுத்தத் தவறிய பல்லாயிரக்கணக்கானவர்கள் தற்போதைக்குச் சிறைச்சாலைகளில் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. இவ்வாறான சிறு குற்றங்களில் ஈடுபட்டவர்களே சிறைச்சாலைகளில் அதிகளவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்பதால் சிறைச்சாலைகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (ச-இ)



மகாராஜா ஸ்ரீராஜசேகராவின் 'கந்தைவேள் காதை' நூல் வெளியீடும், சைவசமய மாநாட்டு விழாவும் மதுரவாசீகர் சிவஸ்ரீ சு. குமாரசுவாமிநாதக்குருக்கள் தலைமையில் நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் கடந்த 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. யாழ்.பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறை முதுநிலை விரிவுரையாளர் இளையதம்பி ஜெயேந்திரன் நூலை வெளியிட்டுவைக்க ஓய்வுநிலை கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் சு.கணேசமூர்த்தி நூலின் ஆய்வுரையை ஆற்றினார். (ச)




# நல்லூரில் முன்னணியின் மக்கள் குறைகேள் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன.8
தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரால் மக்கள் குறைகேள் சந்திப்பு நல்லூர்த் தொகுதியில் அண்மையில் இடம்பெற்றது.
இதில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கொள்கைப் பரப்புச் செயலாளரும் சட்டத்தரணியுமான நடராஜா காண்டீபன் மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நல்லூர்த் தொகுதி செயற்பாட்டாளர் ஈழத்தமிழ்மணி அய்யா ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-45-20)

## கிளிநொச்சி விவசாயியால்

# குரங்குகளைப் பிடிக்க பரீட்சார்த்தக் கூடு தயாரிப்பு



கிளிநொச்சி, ஜன.8
குரங்கை பிடித்து வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கும் முயற்சிக்காக கூடு ஒன்றை கிளிநொச்சியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தயாரித்துள்ளார்.
குரங்களால் அதிகளவில் விவசாயம் பாதிக்கப்பட்டு நட்டத்தை எதிர்நோக்குவதை தடுக்க இந்தக் கூடு பரீட்சார்த்தமாக தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'தூய இலங்கை' திட்டம் பொலிஸார் களத்தில்!

யாழ்ப்பாணம், ஜன. 08

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் 'தூய இலங்கை' வேலைத்திட்டத்துக்கமைய நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கீழான பொலிஸ் குழுவினர் சுன்னாகம் நகரப்பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன் போது, தலைக்கவசம் இன்றி வாகனம் செலுத்துபவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன் வீதியோரங்களில் இடம்பெறும் சட்டரீதியற்ற நடமாடும் வியாபாரம் செய்பவர்கள், வாகனங்களில் அலங்கரிப்புசெய்பவர்கள், வர்த்தகநிறுவனங்களின் பெயர்ப்பலகைகளை வீதியில் காட்சிப்படுத்துபவர்கள் உட்படப் பலருக்கு அவற்றைச் சீர்செய்யுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. (ச-22, 27)

# வடக்கு - கிழக்கை ஒரு மாநிலமாக்கி சுயாட்சியுடன் கூடிய அதிகாரம் தருக

சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.8

**வடக்கு - கிழக்கு இணைந்த ஒரு மாநிலமாக தமிழ்மக்கள் சுயாட்சியுடன் வாழக்கூடியவாறு புதிய அரசமைப்பை அரசாங்கம் உருவாக்கவேண்டும். அத்துடன் மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்தி அதற்கான அதிகாரங்களை முழுமையாக வழங்கவேண்டும் என்று ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசாங்கம் ஒரு மாற்றத்தை உருவாக்கப்போவதாக சொல்லியிருக்கிறார்கள். நிர்வாகத்தில் மாற்றம், அரசியலில் மாற்றம் ஊழல் இல்லாத நிர்வாக மாற்றம் எனப் பல விடயங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் தமிழ்மக்களது தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய மாற்றங்கள் ஏற்படவில்லை.

ஆகவே, தமிழ்மக்கள் மத்தியில் 75 வருடமாக தேசிய இனப்பிரச்சினை புரையோடிப் போயுள்ள பிரச்சினையாக இருக்கின்றது. அது தீர்க்கப்பட வேண்டும்.

கடந்த 7 வருடங்களாக மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவில்லை. மாகாணசபைத் தேர்தல் என்பது இந்த வருட இறுதியில் நடத்தப்படும் எனக் கூறுகிறார்கள். அரசியல் சாசனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து அதிகாரங்களும் மாகாணங்களுக்கு வழங்கப்படவேண்டும். இந்த அரசாங்கம் மிக விரைவாக அந்த நடவடிக்கைகளை எடுத்தால் மாத்திரமே தமிழ்மக்கள் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்கக்கூடிய ஒரு சூழல் ஏற்படும் எனவும் நாம் கருதுகின்றோம் - என்றார். (ச-18)

# இலங்கைக்கே அனுப்புக அகதிகள் கோரிக்கை

கொழும்பு, ஜன. 8

இலங்கையில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையிலிருந்து கடல் வழியாக தமிழகத்துக்குச் சென்று தனுஷ்கோடியில் தஞ்சமடைந்த 13 குடும்பங்களைச்சேர்ந்த இலங்கை அகதிகள் தம்மை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பிவைக்குமாறு கோரி இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரிடம் மனு கையளித்துள்ளனர். தங்களை இந்திய அரசு இதுவரை அகதிகளாகப் பதிவு செய்யாத காரணத்தினால் இந்திய அரசால் வழங்கப்படும் நிவாரணங்கள் எமக்குக் கிடைக்கவில்லை. எனவே எம்மை மீண்டும் இலங்கைக்கே திருப்பி அனுப்புமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-25, 56)

# சுகாதாரமற்ற உணவுகள்; உணவகத்துக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஜன.8

திருநெல்வேலிப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடான முறையில் உணவுகளை விற்பனைசெய்த உணவகமொன்றுக்கு 70 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா. சஞ்சீவன் தலைமையிலான குழுவினர் கடந்த மாதம் திருநெல்வேலியில் உணவகங்களைச் சோதனையிட்டனர்.

இதன்போது உணவகமொன்றில் காலாவதியான பொருள்கள், ஈ மொய்த்த உணவுகள் என்பவை விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. குறித்த பொருள்களைக் கைப்பற்றிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா. சஞ்சீவன், உணவக உரிமையாளருக்கு எதிராக வழக்குப் பதிவுசெய்து நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தினார். இதன்போது உணவக உரிமையாளர் குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் அவருக்கு 70 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து மேலதிக நீதிவான் செ. லெனின்குமார் தீர்ப்பளித்தார். (ச-26)

# கழிவுநீர் சுத்திகரிப்பு

சாவகச்சேரி, ஜன.8

சாவகச்சேரிப் பிரதேசசபையினர் பொது மக்களின் நலன்கருதி இரண்டு கழிவுநீர் சுத்திகரிப்பு வாகனங்களைக் கொள்வனவு செய்துள்ளனர். பிரதேசசபை எல்லைக் குட்பட்ட மக்கள் கழிவுநீர் சுத்திகரிப்புச் செயற்பாட்டைப் பெற விரும்பின் பிரதேச சபைத் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்கள் ஆகியவற்றுடன் தொடர்புகொண்டு கட்டணங்களை அறிந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,9)





# வீதியில் போடப்பட்ட வாய்க்கால் மண் மக்கள் போக்குவரத்துக்கு இடையூறு!

அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு
பிரதேச மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.8

சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட துர்க்கை அம்மன் கோயில் வீதியில் வெள்ள நீர் வழிந்தோடுவதற்காக வெட்டப்பட்ட வாய்க்காலின் மண் வீதியில் போடப்பட்டுள்ளதால் போக்குவரத்தில் இடையூறுகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது என்று பிரதேசமக்கள் தெரிவித்துள்ளனர். கடந்தமாதம் ஏற்பட்ட வெள்ளநிலையின் போது வீடுகளில் தேங்கியிருந்த வெள்ளத்தை வெளியேற்ற வீதியின் அருகில் வாய்க்கால் வெட்டப்பட்டது. வெட்டப்பட்ட வாய்க்காலின் மண் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும்வகையில் வீதியில் போடப்பட்டுள்ளது என்று மக்கள் கூறுகின்றனர். மட்டுவிலில் இருந்து சாவகச்சேரிக்குச் செல்வதற்குப் பெரும்பாலான மக்கள் இந்த வீதியையே பயன்படுத்துகின்றனர். இரவுவேளையில் வீதி விளக்குகளும் ஒளிராதநிலையில், வீதியில் பயணிக்கும்போது விபத்துகளில் சிக்கநேரிடுகின்றது என்று பிரதேசமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். வீதியின் நடுவே போடப்பட்டுள்ள மண்ணை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக சாவகச்சேரி நகரசபைச் செயலாளரிடம் கேட்டபோது, இதுதொடர்பாக தங்களுக்கு எந்தக்கோரிக்கையும் வரவில்லை, இதுதொடர்பாக ஆராய்ந்து பதிலளிக்கின்றோம் என்று தெரிவித்தனர். ஆயினும் இதுவரை நகரசபையால் எந்தப் பதிலும் வழங்கப்படவில்லை. (ச-25,28)

# காலில் காயத்துடன் பரிதவிக்கும் யானை

யாழ்ப்பாணம், ஜன. 8

கிளிநொச்சி இரணைமடுக்குளப்பகுதியில் 10 நாள்களுக்கு மேலாக காட்டு யானை ஒன்று கால் வீங்கிய நிலையில் மிகவும் துன்பப்பட்டு வருவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். இதுவரை வனஜீவராசிகள் திணைக்களமோ, அது சம்பந்தப்பட்ட திணைக்களங்களோ எதுவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் அந்த யானை வேதனையுடன் அலைந்து திரிவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். குறித்த யானைக்கு உரிய சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

## தடையின்றித் தொடரும் ஆக்கிரமிப்புகள்

**பு**திய அரசாங்கம் நாட்டில் பதவியேற்ற பின்னரும் வடக்கு, கிழக்கில் தொல்லியல் திணைக்களத்தின் பெயரால் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்புகள் நின்றபாடில்லை. தமிழ்ப் பிரதேசங்களில் எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி காணிகளைத் தன்வசப்படுத்தும் தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகள் தற்போதும் தடையின்றித் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. புதிய அரசாங்கத்தின் கீழ் நாடு மாற்றத்தை நோக்கிப் பயணிக்கின்றது என்று கூறப்பட்டாலும், தமிழ் மக்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் எந்த மாற்றமும் இன்றி இப்போதும் தொடர்கின்றன. கடந்தகாலங்களில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களின் ஒருபகுதி இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்டிருந்த நிலையில், தொல்லியல் திணைக்களமும், வனஜீவராசிகள் திணைக்களமும் தங்கள் பங்குக்கு தமிழ் மக்களின் காணிகளை வகைதொகையின்றிக் கையகப்படுத்தியிருந்தன. நீண்டகாலப் போரால் தங்கள் சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்திருந்த தமிழ்மக்கள், மீண்டும் சொந்த இடங்களுக்குத் திரும்பியபோது, அவை பற்றைக்காடுகளாகியிருந்தன. அவற்றைத் துப்புரவாக்கி மீண்டும் குடியமர்வதற்கு வனஜீவராசிகள் திணைக்களமும், வனவளப்பாதுகாப்புத் திணைக்களமும் முட்டுக்கட்டை போட்டதுடன், அவை தங்களுக்குரிய பகுதிகள் என்று அடையாளமிட்டு அடாத்தாகக் கைப்பற்றியிருந்தன. இதுபோதாதென்று தொல்லியல் திணைக்களம் ஒரு பக்கத்தில் தமிழ் மக்களின் காணிகளை ஏப்பமிட்டது. தமிழ்மக்களின் பாரம்பரிய வழிபாட்டிடங்கள் தொல்லியல் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டு, பௌத்த சின்னங்களாக மாற்றப்பட்டிருந்தன .

ஆட்சியில் இருந்த அரசாங்கங்களிடம் தமிழ் மக்களும், தமிழ் மக்கள் பிரதிநிதிகளும் பலமுறை இதுதொடர்பாகச் சுட்டிக்காட்டியபோதும், அவை அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்கு போல எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. தமிழ்மக்கள் இவற்றுக்கு எதிராகப் போராடியபோது, சட்டத்தைக் கொண்டு அவர்கள் அடக்கப்பட்டனரே தவிர, தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஆட்சியாளர்களும், அதிகாரத்தில் இருந்தவர்களும் கிஞ்சித்தும் கவனத்தில் கொள்ளவில்லை. தமிழர் பிரதேசத்தில் திணைக்களங்களின் பெயராலும், தேசியப் பாதுகாப்பின் பெயராலும் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புகளைத் தடுப்பதற்கு ஆட்சியில் இருந்த தலைவர்கள் துளியேனும் முயலவில்லை. மாறாக அவற்றை ஊக்குவிக்கும் வகையிலேயே செயற்பட்டிருந்தனர். இந்தநிலைமையில்'மாற்றம் வேண்டும், தங்கள் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகள், ஆக்கிரமிப்புகள் நிறுத்தப்படவேண்டும்' என்ற விருப்பே, கடந்த தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்கு தமிழர் பிரதேசங்களில் வாக்குகளாக மாறியிருந்தது. முன்னெப்போதும் இல்லாதவாறு தமிழ் மக்களின் ஆதரவையும் பெற்று ஆட்சிக்கு வந்திருக்கும் அநுரகுமார திஸாநாயக்கவும், தேசிய மக்கள் சக்தியும் தமிழ் மக்களின் நியாயமான எதிர்பார்ப்புகளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை என்றே தெரிகின்றது? கடந்த ஆட்சிகளில் நடந்த அடக்குமுறைகளும், ஆக்கிரமிப்புகளும் இப்போதும் எவ்விதமான தடையும் இன்றித் தொடர்கின்றன என்பதால் தானே கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் திணைக்களத்தின் காணி அபகரிப்பு அறிவிப்புப் பலகைகள் இப்போதும் இரவோடு இரவாக முளைத்திருக்கின்றன.


நாட்டின் நிலைபேறான மேம்பாட்டுக்காக தூய இலங்கை போன்ற திட்டங்களைச் செயற்படுத்தியிருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நாடு நிலைபேறான மேம்பாட்டை அடையவேண்டுமானால் நாட்டின் அனைத்து இனமக்களும் சமமாக நடத்தப்படவேண்டியது முக்கியமானது என்பதை அறியாதவரல்லர். நாட்டின் சிறுபான்மை மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அரச இயந்திரத்தால் சிறுபான்மை மக்களுக்கு எதிராக நடக்கும் அடக்குமுறைகள் என்பவற்றைத் தடுத்து நிறுத்தினால் மட்டுமே ஜனாதிபதி எதிர்பார்கும் நிலைபேறான மேம்பாடு நாட்டில் உருவாகும். முன்னுரிமை கொடுத்துத் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளைக் கிடப்பில் போட்டுவிட்டு, அரசியல் பிரபல்யத்துக்காகக் காரியமாற்ற முயன்றால் கடந்தகால அரசாங்கங்களுக்கும், தற்போதைய அரசாங்கத்துக்கும் வித்தியாசம் இருக்கப்போவதில்லை. அவர்களுக்கு நேர்ந்த முடிவே இந்த அரசாங்கத்துக்கும் ஏற்படும் என்பதிலும் மாற்றுக்கருத்துகள் இருக்கப்போவதில்லை.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

"போதும் என்று நொந்துபோய் புதுவாழ்வைத் தேடுகிறீர்களா.. ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்குங்கள்"

– இங்கர்சால்–




## 'தூய இலங்கை' திட்டம் நிறுத்தப்படமாட்டாது!

**கொழும்பு, ஜன. 8**

**'தூய இலங்கை' திட்டத்துக்கு எதிராக எதிர்ப்புகள் வெளிக்கிளம்பினாலும் எமது இந்தத் திட்டத்தை இடைநிறுத்தமாட்டோம் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிலதொலைக்காட்சிநிறுவனங்கள் இந்தத் திட்டத்துக்கெதிராக பிரசாரம் மேற்கொள்கின்றன. நாட்டைச் சுத்தம் செய்யுமாறு மக்கள் எமக்கு ஆணையிட்டுள்ளனர். மக்களின் ஆணையை மதிக்கவேண்டியது எமது கடமை. நாங்கள் உங்களை ஒன்றும் செய்யமாட்டோம். நாட்டையே தூய்மைப்படுத்துகின்றோம். ஊடகங்கள் அறிக்கையிடுவதற்காக நாங்கள் எமது திட்டத்தை நிறுத்தமாட்டோம். ஊடகங்களும் தம்மை சுத்தம் செய்வது நல்லது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-22,6)



## விளையாட்டு மேம்பாட்டுக்கு; இந்தியா ஒத்துழைப்பு

கொழும்பு, ஜன. 8

விளையாட்டுத்துறை மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பை வழங்குவோம் என்று இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார். இந்தியத் தூதுவருக்கும் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகேவுக்கும் இடையே நேற்று முன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போதே தூதுவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ச-22-6)

## கதிரியக்க இயந்திரம் பழுது; புற்றுநோயாளர்கள் அவதி

கொழும்பு, ஜன.8

மகரகம புற்றுநோய் மருத்துவமனையிலுள்ள கதிரியக்க இயந்திரங்களில் ஒன்று பழுதடைந்துள்ளதால் நாளொன்றுக்குச் சராசரியாக 60 நோயாளிகள் பாதிக்கப்படுகின்றனர் என்று கதிரியக்க தொழில்நுட்பவியலாளர் சங்கத் தலைவர் சனக தர்ம விக்ரமரத்ன தெரிவித்துள்ளார். மகரகம புற்றுநோய் மருத்துவமனையில் மூன்று கதிரியக்க இயந்திரங்கள் உள்ளன. இவற்றில் ஒன்று டிசெம்பர் 31 ஆம் திகதி முதல் செயலிழந்து உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-22,6)

## 30,000 ஆசிரியர் வெற்றிடங்கள்

கொழும்பு, ஜன. 8

நாடளாவிய ரீதியில் 30,000 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் உள்ளிட்ட பாடங்களுக்கும் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

புதிய ஆசிரியர்கள் பணியமர்த்தப்படும் வரை காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ தெரிவித்துள்ளார் (ச-இ)



## புலம்பெயர் இலங்கையருக்கு ஒன்லைனில் சான்றிதழ்கள்!

கொழம்பு, ஜன. 8

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் பிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ் மற்றும் இறப்புச் சான்றிதழ்களை தாமதமின்றி அந்தந்த நாடுகளின் தூதரகங்கள் மூலம் பெற்றுக் கொள்ளும் வகையில் டிஜிற்றல் வசதிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் டிஜிற்றல் மயமாக்கல் நிகழ்ச்சி நிரலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டத்துக்கமைய இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக இந்தத் திட்டத்தின் கீழ் ஜப்பான், கட்டார், குவைத் போன்ற நாடுகளிலுள்ள தூதரகங்கள் மற்றும் ரொறன்ரோ, மெல்பேர்ன், துபாய், மிலான் நகரங்களிலுள்ள துணைத் தூதரகங்கள் இணைக்கப்பட்டுள்ளன. (ச-25,6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் கஜமுகசுர சங்ஹாரம் கடந்த சனிக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-45-63)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் தவில் வித்துவான் சண்முகவடிவேல் பாலேந்திரம் குழுவினரின் மங்கள இசை இடம்பெற்றது. அண்மையில் 'சாதனைத் தமிழன்' விருது பெற்றுக்கொண்ட சந்நிதியான் ஆச்சிரம முதல்வருக்குச் சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவை சார்பில் சிறப்பான கௌரவமும் அளிக்கப்பட்டது. (ச-25,66)



கவிஞரும், ஆய்வாளரும், சங்கீத விற்பன்னருமான கலாபூஷணம் சி.சிவானந்தராஜாவின் 'நவாலியூர் க.சோமசுந்தரப் புலவரும் அவர் இயற்றிய பிரபந்தங்களும்' என்ற நூல் வெளியீடு காலையடி, பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ச-25)



சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் வருடாந்த திருவாசகம் முற்றோதல் நிகழ்வு சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் வி.தயாபரன் தலைமையில் யாழ். நீராவியடியில் அமைந்துள்ள சைவபரிபாலன சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் சைவபரிபாலன சபையின் நிர்வாகத்தினர் மற்றும் அடியவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு பக்திபூர்வமாகத் திருவாசகம் முற்றோதினர். (ச-25,66)





## பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம் , ஜன. 8

கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வு அதிபர் பி.தர்மபூபதி தலைமையில் பாடசாலையின் ஞானம் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஜெகதாசன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லலிதா மலர் முகுந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-22,159)



வட மாகாண சமூகசேவைகள் திணைக்களத்தால் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகங்களில் கல்விபயிலும் மாணவர்களுக்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலர் பொ.வாகீசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்ட 722 மாணவர்களில் நூறு பேருக்கு சம்பிரதாயபூர்வமாக நிதியுதவி வழங்கப்பட்டது. (ச-25,27)

## முல்லைத்தீவில் மரைவேட்டை இறைச்சியுடன் ஒருவர் கைது!

முல்லைத்தீவு, ஜன. 8

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புக் காட்டுக்குள் மரையை வேட்டையாடிய நபர் ஒருவர் இறைச்சியுடன் கைது செய்யப்பட்டுள்ளார். புதுக்குடியிருப்பு வனஅதிகாரி தலைமையின் கீழ், விசேட அதிரடிப் படையினர் மற்றும் திணைக்களத்தினரால் நடத்தப்பட்ட சிறப்புச் சுற்றிவளைப்பைத் தொடர்ந்தே சந்தேக நபர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடம் இருந்து மரை இறைச்சியும் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் மேலதிக நடவடிக்கைகளுக்காக வனஉயிரிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-125)

## யாழ்ப்பாணத்தில் எமக்கு காணிகள் உள்ளன

### மாவட்டச் செயலகத்துக்கு சிங்கள மக்கள் கடிதம்

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ்ப்பாணத்தில் தமக்குக் காணிகள் உள்ளதாகவும், அவற்றைத் தமக்கு மீளவும் வழங்குமாறு கோரி தென்பகுதியில் உள்ள சிங்கள மக்கள் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

தமது முன்னோருக்கு யாழ்ப்பாணத்தில் காணி இருந்ததாகவும் அவற்றை தமக்குத் தருமாறும் கோரியே அவர்கள் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்திடம் கோரியுள்ளனர். இதையடுத்து, காணிகளின் விவரங்களை சமர்ப்பிக்குமாறு மாவட்டச் செயலகத்தால் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-125)



சாவகச்சேரி கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோவிலில் பிள்ளையார் விரதத்தின் கஜமுகசுர சங்ஹாரம் அண்மையில் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை
08.01.2025
புதன்கிழமை

நான் சிறந்தவன் என்று கூறியிருக்கிறேன்; ஒருபோதும் நான் புத்திசாலி என்று சொன்னதில்லை.

- முகம்மது அலி

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் அரங்கேறி இந்த வருடத்துடன் 51 ஆண்டுகள் ஆகின்றன. அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

# ஆறாத வடுக்களாக தமிழாராய்ச்சி படுகொலைகள்



■ நந்தன்


உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்து தற்போது 51ஆண்டுகள் கடந்தாலும் அதன் வடுக்கள் இன்னும் ஆறவில்லை. கடந்த 1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி யாழ். நகர் வீரசிங்கம் மண்டபத்தில் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு வெகு விமர்சையாக நடைபெற்றது. இந்த மாநாட்டில் சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். அத்துடன், பல்வேறு நாடுகளிலிருந்தும் பல தமிழறிஞர்களும், பொதுமக்களும் இந்த மாநாட்டில் பங்கேற்றனர். கோலாகலமாக இடம்பெற்ற மாநாட்டைக் கண்டு இலங்கை அரசு அச்சம் கொண்டது போலும், காவல்துறையினரை ஏவிவிட்டு மாநாட்டை அலங்கோலமாக்கிவிட்டனர்.

மாநாட்டில் கலந்துகொண்ட தமிழ்மக்கள் மீது மூர்க்கத்தனமாக தாக்குதல் நடத்தப்பட்டது. தடியடிப் பிரயோகம், கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல் என்பன மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டன. போதாதக் குறைக்கு இறுதியில் துப்பாக்கிச்சூடும் நடத்தப்பட்டது. இந்தத்தாக்குதலில் 9 பேர் துடிதுடித்து உயிரிழந்தனர்.

அத்தோடு நாலா பக்கமும் சிதறி ஓடியதால் மின்சாரக் கம்பிகளுள் சிக்குண்டு இருவர் பரிதாபகரமாக உயிரிழந்தனர். 51 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலை உலக நாடுகள் யாவும் வன்மையாகக் கண்டித்தன. பாரதத்திலிருந்து மாநாட்டுக்கு வருகை தந்திருந்த அறிஞர்கள் இந்தத் தாக்குதலைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். அன்றையதினம் முழு யாழ்ப்பாணமும் சோகத்தில் மூழ்கியது.

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த சி.நந்தகுமார் (வயது - 14), தொல்புரம் மேற்கைச்சேர்ந்த வே.கேசவராசன் (வயது -15), காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இ.சிவானந்தம் (வயது -21), புலோலி கிழக்கைச் சேர்ந்த ப.சரவணபவன் (வயது - 26), நாவலர் வீதியை சேர்ந்த இ.தேவரத்தினம் (வய. , தெல்லிப்பழையைச் சேர்ந்த வை.யோகநாதன் (வயது -33), யாழ். பங்சால் வீதியைச் சேர்ந்த யோ.சிக்மறிங்கம் (வயது - 53), நாயன்மார்கட்டைச் சேர்ந்த சி.ஆறுமுகம் (வயது -55), கோப்பாய் வடக்கைச் சேர்ந்த சி.பொன்னுத்துரை (வயது -56), ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஆ.தில்லைநாயகம் (வயது - 37), யாழ். 2 ஆம் குறுக்குத்தெருவை சேர்ந்த பி.அருளப்பு (வயது -52) ஆகியோரே மாநாட்டில் பரிதாபகரமாக உயிரிழந்தோராவர். இவர்களின் நினைவாக யாழ் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால் முற்றவெளியில் நினைவுத் தூபி அமைக்கப்பட்டு அங்கே வருடா வருடம் ஜனவரி 10ஆம் திகதி சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் நடைபெறுவது வழமையாகும். ■






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டு அம்சங்கள் நிறைந்த

# வலி.தென்மேற்கு பண்பாட்டு விழா








வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன்
*ஓய்வுநிலை அதிபர், சண்டிலிப்பாய்*

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகம் வருடாந்தம் நடத்துகின்ற பண்பாட்டு விழா இவ்வருடமும் மிகவும் கோலாகலமாக நடைபெற்றுள்ளது. பிரதேச செயலரும் கலாசாரப் பேரவையின் தலைவருமாகிய திருமதி சுபாஜினி மதியழகன் தலைமை தாங்கிய விழாவுக்கு, யாழ். மாவட்டச் செயலாளர் ம.பிரதீபன் அதிதியாகக் கலந்துகொண்டார்.

தமிழர்களின் கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் வகையிலே மங்கல வாத்தியம், கோலாட்டம், சிலம்பாட்டம், காவடி நடனங்களுடன் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டனர்.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து மானிப்பாய் மைந்தர்களான வை.ஜெகநாதன் குழுவினரின் மங்கலவாத்திய இசை நிகழ்வை வசப்படுத்தியது. சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தமிழ்த்தாய் வாழ்த்து இசைத்தனர். சண்டிலிப்பாய் நாகபூஷணி கலாமன்ற மாணவியரின் நாட்டியதர்ப்பணம் கண்களுக்கு விருந்தாகியது. சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் புதிய உதவிப்பிரதேச செயலர் திருமதி சங்கீதா கோகிலதர்சன் வரவேற்புரை வழங்கினார். செயலகத்தின் கலாசார அபிவிருத்தி அலுவலர் திருமதி லேறாஜிரூபன் அரங்கத்தின் திறப்புரையாற்றினார். சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகனின் தலைமையுரை அடுத்ததாக இடம்பெற்றது. சுருக்கமாகவும் அதேநேரம் தெளிவாகவும் பண்பாட்டுவிழா ஏற்பாடுகள் தொடர்பாக பிரதேச கலாசாரப் பேரவை, கலாசார அதிகாரசபை, கலைஞர்கள் மற்றும் 'கலாதரம் -5' நூல் வெளியீட்டுக்குழு ஏனையோர் மேற்கொண்ட செயற்பாடுகளைக் கூறியதுடன் விருந்தினர்கள் அனைவரையும் விழித்து வருகைக்கான தன் மகிழ்வைப் பகிர்ந்து கொண்டார்.

பண்பாட்டு விழாவின் அரங்கிலே சண்டிலிப்பாய் கலாசார மத்தியநிலைய மாணவர்களின் 'நாடகப் பாடல்கள்' நிகழ்வு அரங்கேறியது. புராண வரலாற்று மற்றும் இலக்கிய நாடகங்களிலே நடிகர்களால் பாடப்படும் சிறந்த பாடல்களை கலாசார மத்திய நிலைய மாணவர்கள் அபிநயத்துடன் இசைத்தார்கள். 'கலாதரம்-5' இதழை பிரசுவித்த கலாசார உத்தியோகத்தர் திருமதி றஜனி நரேந்திரா ஆவார். நூல் வெளியீட்டுரையினை ஓய்வுநிலை அதிபர் வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன் வழங்க, நூல் நயப்புரையினை யாழ்.பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறையின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி திருச்செல்வம் செல்வமனோகரன் ஆழமாக சபையினருக்கு எடுத்துக் கூறினார். அண்மையில் கலாபூஷணம் விருதுபெற்ற ஓவியர் சுப்பிரமணியம் பத்மநாதனின் அட்டைப்படம் 'கலாதரம் - 5' க்கு பெரும் எடுப்பாக அமைந்தது.

தொடர்ந்து, சிவலீமன் தற்காப்புக்கலை மன்ற மாணவர்களின் 'சிலம்பம்' நிகழ்வு அரங்கை அதிர வைத்தது. அத்துடன், எமது வீரகாவியமாக நாம் கொண்டாடும் இராமாயணத்திலிருந்து ஒரு காட்சியை 'இராவணேசன்' எனத் தலைப்பிட்டு எங்கள் பிரதேச கலைஞர்கள் மிகவும் கச்சிதமாக நடித்துக் காட்டினார்கள். இராவணனின் அரண்மனையில் அங்கதனுக்கும், இராவணனுக்கும் இடையில் நடைபெறும் சொற்போர் அவையில் இருந்தவர்களைக் கட்டிப்போட்டது.

இராவணன் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் போது நடனமாது ஒருவரின் அதிசிறந்த பரத நாட்டிய நடனத்துடன் திரை விலகியது. ஆரம்பமே உச்சம்தான். அரண்மனைப் புலவனின் பாடலுக்கு அக்கன்னிகையின் ஆட்டம் கண் சிமிட்டாமல் பார்க்குமளவுக்கு நன்றாக அமைந்தது. இராவணனாக காட்சி தந்த தம்பி சி.தர்சனின் நடிப்பு மிக உச்சம். சிம்மாசனத்தின் அமைப்பும், இராவணன் அதில் ஏறி இறங்கும் பாணியும் அற்புதம். மேடை ஒழுங்கு, நடிகர்களின் ஆடை அலங்காரம், நடிப்பு எல்லாமே பிரமாதம். இருந்தாலும் மண்டபத்தின் நடுப்பகுதிக்கு ஒலியமைப்பு போதாது. நாடகம் நிறைவுற்ற பின் எமது பிரதேசத்தின் கலைஞர்களிலிருந்து பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து 'இளம் கலைஞர்கள் விருது 2024', 'கலை ஞாயிறு விருது 2024 ' பிரதம மற்றும் விருந்தினர்களால் விருதுகள் வழங்கி பொன்னாடை போர்த்தி மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிப்பு வழங்கப்பட்டது. நிகழ்வை தொகுத்து சிறப்பாக ஒலிபரப்புச் செய்த அறிவிப்பாளர்கள் திருமதி மாலதிதேவி மதிவதனன், பரமலிங்கம் தமிழ்மாறன் ஆகியோரும் பாராட்டுக்குரியவர்களாவர்.

சிறப்புற இடம்பெற்ற

# யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம் மாவட்டப் பண்பாட்டு விழா அரியாலை மகாமாரியம்மன் மண்டபத்தில் இன்று வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது. இதன்போது கலை பண்பாட்டு நிகழ்வுகளுடன் விருந்தினர்கள் நிகழ்வு மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

யாழ். மாவட்ட பதில் செயலாளர் ம.பிரதீபனின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற யாழ். மாவட்ட செயலாளர் செ.பத்மநாதன், முதன்மை விருந்தினராகவும் வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் லாகினி நிருபராஜ், ஓய்வு நிலை அழகியல் உதவிக் கல்விப் பணிப்பாளர் கலைஞர் வேல்.ஆனந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் 'இளங்கலைஞர்' மற்றும் 'யாழ் முத்து' விருது வழங்கலும் இடம்பெற்றன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# மார்கழித் திங்களல்லவா...!





தென்னாட்டு அருள்மிகு ஐம்பூதநாதர் திருக்கோவில் மற்றும் தென்னாட்டு அருள்மிகு ஐம்பூதநாதர் திருக்கோவில் மாணவர் சபையின் ஏற்பாட்டில், மார்கழிப் பெருவிழாவில் ஆன்மீகச் சிந்தனையை வெளிப்படுத்தும் வகையில் மார்கழித்திங்கள் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்றது.

விழாவில் சிறப்பம்சமாக நகர ஊர்வலம் இடம்பெற்றது. இந்த ஊர்வலமானது வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரா தேவஸ்தான முன்றலில் இருந்து ஆரம்பமாகி அங்கிருந்து கே.கே.எஸ். வீதி, யாழ். மருத்துவமனை வீதி, மணிக்கூட்டுக் கோபுர வீதியூடாக வந்து யாழ். இந்திய மத்திய கலாசார மத்திய நிலையம்வரை சென்று நிறைவுபெற்றது. தமிழர்களின் பாரம்பரிய கலையான பொம்மலாட்டம் உள்ளிட்ட கலைகளும் நகர் ஊர்வலத்தை அலங்கரித்தன. இரு யானைகளும் பவனி வந்தன. நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்துகொண்டார்.



திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய 1023 திருமுறைகள், திருநாவுக்கரசு நாயனார் அருளிய 456 திருமுறைகள், சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய 7ஆம் திருமுறைகள், மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய 8 ஆம் திருமுறைகள், திருமூலதேவர் அருளிய 10ஆம் திருமுறைகள், 12 ஆழ்வார்கள் அருளிய 11 ஆம் திருமுறைகள், தெய்வச்சேக்கிழார் அருளிய 12 ஆம் திருமுறைகள், மெய்கண்ட சமுத்திரம் போன்ற நூல்கள் அடங்கிய தொகுதிகளை வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் இந்திய பழனி ஆதீன குருவானவர் கையளித்தார்.


நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன், தஞ்சாவூர் பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் ச.நல்லசிவம், செந்தமிழ் சொல் வித்தகர் பழனி குமாரலிங்கம், கொழும்பு பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் த.பிரசாந்தன், தவத்திரு வேலன் சுவாமிகள்உள்ளிட்டப் பலரும் கலந்துகொண்டனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேனாப்போராளிக்கு அஞ்சலி




மறைந்த ஈழ மண்ணின் மூத்த படைப்பிலக்கியவாதி நா.யோகேந்திரநாதன் ஐயாவின் நினைவேந்தல் நிகழ்வு கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் சிறப்புற இடம்பெற்றது. ஈழத்தின் இலக்கிய, நாடக, திரைப்பட மற்றும் வானொலித் துறைசார்ந்த பன்முக ஆளுமையாளரான நா.யோகேந்திரநாதனின் கலைப்பணிகள் கனதியானவை.

போராட்ட காலத்தில் புலிகளின் குரல் வானொலியில் ஒலிபரப்பான நா.யோகேந்திரநாதனின் 'உயிர்த்தெ முகை' நாடகம் ஈழ உணர்வாளர்கள் மத்தியில் அவருக்கான இடத்தை மேலுயர்த்தியிருந்தது.

இன விடுதலை என்ற சத்திய இலட்சியத்தை தன் இதயத்தே சுமந்த ஓர் பேனாமுனைப் போராளியா அதே வீரியத்தையும், விவேகத்தையும் படைப்பிலக்கியம் என்னும் துறைக்குள் ஒருசேர இணைத்து, புனைவுகள் அற்ற போரியல் ஆவணங்களாக தன் படைப்புகளை வெளிக்கொணர்ந்த அவரின் எழுத்துலகப் பணி, ஒரு விடுதலைப் போராளியின் ஆத்மதாகம் நிறைந்த காலப்பெரும்பணியாகவே அமைகிறது.

உலகப் போரியலின் வரலாற்றுத் திருப்புமுனையான 'குடாரப்புத் தரையிறக்கம்' குறித்துப் பேசும் 34 நாட்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு என்னும் வரலாற்று நாவலை எழுதி வெளியிட்டுள்ளார். ஒரு படைப்பாளன் தன் படைப்புகளின் வழி காலம் உள்ளவரை வாழ்வான் என்பது போல் யோகேந்திரநாதன் ஐயாவும் தமிழ்த்தேசியத்தின் அழியா முகமாக என்றும் எம் நெஞ்சங்களில் நிறைந்தே இருப்பார்.


அவரது நினைவுகளை மீட்டும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த அஞ்சலி நிகழ்வில், நா.யோகேந்திரநாதனின் குடும்பத்தினர், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் ஈழத்தின் இலக்கியப் படைப்பாளர்கள், கலைஞர்கள், பாடசாலை அதிபர்கள், ஊடகவியலாளர்கள், தமிழ்த்தேசிய ஆர்வலர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.







# வாசிப்பினால் வாழ்வில் வெற்றிகாண்போம்



15

**பத்மசேனன் சனோசன் (பி.ஏ.)**

அப்துல்கலாம் கல்வியை விடுதியிலிருந்து கற்றார். அப்போது அவருடைய குடும்பம் புயற்காற்றினால் பாதிக்கப்பட்டபோது, அவருடைய பெற்றோர் அப்துல்கலாமைப் பார்க்க உடனே வீட்டிற்கு வரும்படி அவரை அழைத்திருந்தனர். செல்வதற்குப் பணம் இல்லாத நிலையில், பேராசிரியர் ஒருவர் கொடுத்த மிகச் சிறந்த புத்தகம் ஒன்றினை விற்று வீடு சென்றுவிடுவோம் என்று ஆயத்தமாகி, புத்தகக் கடைக்குச் சென்றார், அப்துல்கலாமின் அவசர நிலையையும், அவர் புத்தகத்தின் மீது கொண்டபற்றையும் அறிந்த கடை நிர்வாகி, பணத்தைக் கொடுத்துவிட்டு, மீண்டும் வந்து அந்தப் புத்தகத்தை வாங்கிக்கொள்ளும்படி கூறியிருந்தார். அந்தப்பணத்தை வாங்கிய அப்துல்கலாம் உடனே வீடு திரும்பினாலும், வீட்டில் இருந்தபோது புத்தகத்தின் ஞாபகத்திலேயே இருந்தார். திரும்பி வந்து பணத்தை மீண்டும் செலுத்தி புத்தகத்தினை வாங்கிய பின்புதான் அவருடைய மனம் அமைதியடைந்தது என்று கூறியிருந்தார். இப்படித்தான் வெற்றியாளர்கள் தங்களைப் போன்று புத்தகங்களையும் அதிகம் நேசித்தமைதான் அவர்களை அடுத்த நிலைக்கு அழைத்துச் சென்றிருக்கிறது என்பதனை அனுபவரீதியாக அறியமுடிகிறது.

'நூலகம் ஒன்று திறக்கப்படும்போது, சிறைச்சாலை ஒன்று மூடப்படுகின்றது'

உலகில் பல்வேறு வெற்றியாளர்கள் இதனை தங்கள் வாழ்வில் வாசிப்பை முக்கியமான கடமையாகக் கொண்டிருக்கிறார்கள். அதில் உலகின் மிகச்சிறந்த எழுத்தாளரும், பேச்சாளருமான டேல்கார்னகி புத்தகத்தை அதிகம் நேசித்திருக்கிறார். தாம் பயணம் மேற்கொள்ளும்போதெல்லாம், புத்தகங்களைக் கொண்டு செல்வார். அதேபோன்று உலகில் மிகச்சிறந்த பணக்காரர்களில் ஒருவரான பில்கேட்ஸ் வாழ்வில் புத்தகங்கள் பெரிய பங்குவகித்துள்ளன. அனைத்து விதமான வெற்றியாளர்களும், தமக்கு வேண்டிய பல்வேறு விடயங்களையும் வாசிப்பின் மூலம் மேம்படுத்தியிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

"வாசிப்பு ஒரு மனிதனை பூரணமடையச் செய்கின்றது".. இன்றைய நவீனத்தின் பரிணாம வளர்ச்சியிலே, வாசிப்பின் தன்மையும், புத்தகம் மீதான தேடலும் குறைந்து செல்வதனை அவதானிக்க முடிகின்றது. அனைத்தும் மின்னியலாக்கம் செய்யப்பட்டுள்ளன. எனவே புத்தகங்களை நாடுவதனை விடுத்து இணையத்தின் ஊடாகவே அவற்றைப் பார்த்து விடலாம் என்று பலர் எண்ணி விடுகின்றோம்.

இதன்மூலம் மனம் அமைதியடைவதுடன். பலவற்றை மேற்கொள்வதற்கான வழிகாட்டலையும் கொடுக்கின்றது. வாசித்து முடித்த பின்பு மனதின் குறித்த ஒரு எண்ணம் தோற்றம் பெறும்.

அவை எங்களைச் சிறப்பாக வழிநடத்தும். வாசிப்பு ஒரு மனிதன் எப்படி சிறந்த மனிதனாக வாழ முடியும் என்பதனை அறிவியல் பூர்வமாகவும், மொழி, இனம், மதம் கடந்து அனைவரும் பின்பற்றவேண்டிய பொது மொழி என்பதையும், ஒவ்வொரு எழுத்துகளும், சொற்களும் மிகவும் சக்தி பொருந்தியவையெனவும், புத்தகங்கள் பலருடைய தத்துவங்களையும் கொண்டிருக்கும். மனதினை எப்போதும் இளமையாக வைத்திருப்பதற்கு வாசிப்பு அவசியமாகின்றது. "தூக்குத்தண்டனை நிறைவேற்ற முன்பு சதாம் உசைனிடம் படைவீரர் சென்று உங்களுக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படப்போகிறது. எனவே உங்களுடைய கடைசி ஆசை என்ன? என்று கேட்ட போது தனது கடைசி ஆசை திருக்குறளை வாசிக்க வேண்டும்" என்று கூறியமை வாசிப்பின் மகத்துவத்தினை எடுத்துக்காட்டி நிற்கின்றது.

எவ்வளவு காலம் வாழ்கின்றீர்களோ அது வரையில் எப்படி வாழ்வது என்று கற்றுக் கொண்டே இருங்கள்" (ரோமானிய தத்துவஞானி செனகா)

புதன்பொய்கை
க்கு
நீங்களும்
எழுதலாம்

- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் மருத்துவ பீடாதிபதி

## கலாநிதி இராஜேந்திர பிரசாத் நேற்றுக் காலமானார்!



யாழ்ப்பாணம், ஜன. 8
யாழ். பல்கலைக்கழக முன்னாள் மருத்துவ பீடாதிபதி மருத்துவ கலாநிதி இராஜேந்திர பிரசாத் நேற்றுக் காலமானார். அவரின் உடல் மருத்துவ பீடத்தின் உடற்கூற்றியல் துறைக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது. (ம-இ)

## வீடுமீது தாக்குதல் சந்தேகநபர் கைது

கிளிநொச்சி, ஜன. 8
கிளிநொச்சி செல்வாநகர் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது 2022ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 30ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் தேடப்பட்டுவந்த நபர் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.
ஐந்தாம் குறுக்குத்தெருப் பகுதியில் வைத்து அவர் கைது செய்யப்பட்ட நிலையில், சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-23)

**வீடு வாடகைக்கு விடப்படும்**
யாழ். நகருக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
**076 136 5905**
(CR 44860) A-1

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி ஜெயப்பிரபா ஸ்ரீதரன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்
**அமரர் சின்னத்தம்பி மயில்வாகனம்**
அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பிறப்பு 16.02.1941 — இறப்பு 07.12.2024

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
(CS/57149) J-1

## பகவத் கீதைமீது பதவிப் பிரமாணம்

வொஷிங்டன், ஜன. 8
அண்மையில் நடைபெற்ற அமெரிக்க காங்கிரஸ் தேர்தலில் வெற்றிபெற்ற சுகாஷ் சுப்ரமணியம் பகவத்கீதை மீது பதவிப்பிரமாணம் செய்துள்ளார்.
அமெரிக்க அதிபர் தேர்தல் அண்மையில் நடைபெற்றது. 312 தொகுதிகளில் வெற்றி பெற்று அவர் ஆட்சியைக் கைப்பற்றினார். எதிர்வரும் 20ஆம் திகதி ட்ரம்ப் அமெரிக்காவின் அதிபராகப் பதவியேற்கவுள்ளார். இந்த நிலையில், அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் தற்போது பதவியேற்றுள்ளனர். இதன்போதே, வெர்ஜீனியாவில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுகாஷ் சுப்ரமணியம் பகவத்கீதை மீது பதவிப் பிரமாணம் செய்துள்ளார். (ம)

## இராணுவத்தால் வீடு கையளிப்பு!

யாழ்ப்பாணம் , ஜன. 8
புலோலி மேற்குப் பகுதியில் பொருளாதாரம் நலிவுற்ற குடும்பமொன்றுக்கு இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட வீடு ஒன்று கையளிக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் திங்கட்கிழமை முற்பகல் இடம்பெற்றது. அமெரிக்காவில் வசிக்கும் ஜுனோ மற்றும் சாம் சின்னையா ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் 521 ஆம் படைப்பிரிவினரினால் இந்த வீடு நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது. (ச-22,100)

## கீரிமலை ஸ்ரீமத் நாராயண சுவாமி தேவஸ்தானம் (கீரிமலை கிருஷ்ணர் கோவில்)

### வைகுண்ட ஏகாதசி உற்சவம்

**மேற்படி ஆலயத்திற்கு 34 வருடங்களின் பின் சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் மக்கள் வழிபாட்டிற்காக அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வருட வைகுண்ட ஏகாதசி உற்சவமானது 10.01.2025 வெள்ளிக்கிழமை. 11.01.2025 சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை பூசை வழிபாடுகள் நடைபெறும் அத்துடன் அன்னதான நிகழ்வுகளும் இடம்பெறும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.**

கீரிமலை ஸ்ரீமத் நாராயண சுவாமி தேவஸ்தான பரிபாலன சபை

### இளைஞர்...

தொடர்புடைய மேலும் மூவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
தலைமறைவாக இருந்த சந்தேகநபர்கள், யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நடமாடுகின்றனர் என்று யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவத்தில் ஏற்கனவே நான்கு பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே, தற்போது மேலும் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-26-20)

### மத்திய...

எல்.எம்.டி சஞ்சிகையால் இந்த விருது மத்திய வங்கியின் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதைப் பெற்றுக்கொண்டமைக்காக, நேற்று நடைபெற்ற அரச நிதிப்பற்றிய குழுவின் முதலாவது அமர்வில் ஆளுநருக்குப் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. (அ-ம-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 12 . 1941 — இறப்பு 07 . 01 . 2025



**நாராயணசாமி இசக்கியம்மாள் (மணி)**
கில்னர் லேன், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாராயணசாமி இசக்கியம்மாள் (மணி) அவர்கள் நேற்று (07.01.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமார் - செல்லம்மா (பகவதி) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் - சிதம்பரம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற S.நாராயணசாமியின் அருமை மனைவியும், P.லட்சுமி, S.சரஸ்வதி, ரவீந்திரன், ரகுநாதன், நகுலேந்திரன், குணபாலசுந்தரம், பிரபாகரன், S.பிரதீபா, சியாம்சுந்தர் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.01.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

44/5, நந்தாவில் குறுக்கு லேன், கொக்குவில்.
தகவல்: குடும்பத்தினர்

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 . 11 . 1965



மறைவு 31 . 12 . 2022

யாழ். இணுவில் கிழக்கு மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கை வதிவிடமாகவும் கொண்டிருந்த சிவனடியான் தயாளினி அவர்களின் 2ம் ஆண்டு நினைவஞ்சலி.
திதி: 08-01-2025

ஆண்டுகள் இரண்டாகியும் ஆறவில்லை எங்கள்
சோகம்
தாண்டிப் பல ஆண்டுகள் போனாலும் மாறாது
உங்கள் பாசம்
கூண்டுப் பறவையாக கூடிநாம் வாழ்வதைக்கண்ட காலன்
தூண்டில் போட்டுக் கவர்ந்தானோ எங்கள் தெய்வமே!
பத்துமாதங்கள் பக்குவமாய் வயிற்றில் சுமந்து சத்துள்ள உணவுவகைகளை அறுசுவை குன்றாது
நித்தம் ஊட்டிவளர்த்த கண்கண்ட தெய்வமே சத்தமில்லா உலகத்திற்கு சென்றது எங்கே
அம்மா!
மீண்டும் உன்
கருவறைக்குள்
எனக்கோர் இடம் கிடைக்குமா?....
மழைகூட ஒருநாளில் தேனாகலாம், மணல்கூட ஒருநாளில் பொன்னாகலாம்
ஆனாலும் அவை யாவும் நீ ஆகுமா?
மீண்டும் உன் கருவறைக்குள்
எனக்கோர் இடம் கிடைக்குமா?....
மழைகூட ஒருநாளில் தேனாகலாம், மணல்கூட ஒருநாளில் பொன்னாகலாம் ஆனாலும் அவை யாவும்
நீ ஆகுமா? அம்மா என்று அழைக்கின்ற சேய் ஆகுமா?
எங்கள் அன்புத் தாயே!
எங்கள் ஆசை அம்மாவே ஆண்டு இரண்டு மறைந்து போனாலும் எப்பொழுதிலும் என்றும் ஆறாத
துயரத்தில் ஆழ்ந்து இருக்கின்றோம் அம்மா...
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

தகவல் :
குடும்பத்தினர்
(CS 373) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 10 . 1936



மறைவு 07 . 01 . 2025

## அமரர் இளையதம்பி சொக்கலிங்கம்

(ஓய்வுநிலை ஆங்கில ஆசிரியர்)

நாவற்குழி மேற்கினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சொக்கலிங்கம் நேற்று (07.01.2025) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலம்சென்றவர்களான இளையதம்பி-இராசமணி தம்பதியரின் அன்பு மகனும், காலம்சென்றவர்களான ஐயாத்துரை- தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், மனமல்லி, காலம்சென்ற ஜனகன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், மனோகரன் (கனடா), காலம்சென்ற விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருசாத் (கனடா), உமையாள் (கனடா), ஞானக்குமரன் (கனடா), ஆகியோரின் அன்புப் பேரனும் காலம்சென்றவர்களான அன்னம்மா, கனகரத்தினம், மற்றும் மங்கயற்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராமச்சந்திரனின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (08.01.2025) புதன்கிழமை கிரிகைகள் இடம்பெற்று நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரிகைகளுக்காக நாவற்குழி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


சித்தி விநாயகர் வீதி
நாவற்குழி மேற்கு கைதடி.

(CS 2217) V-1

தகவல்: குடும்பத்தினர்
077 375 4403

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 07 . 1935



மறைவு 06 . 01 . 2025

## முருகேசு பாலசுப்பிரமணியம்

(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர் நீர்ப்பாசனத் திணைக்களம்)

வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் ஆலங்குளாய் சண்டிலிப்பாயை புகுந்த இடமாகவும், நல்லூர் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று முன்தினம் (06.01.2025) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு-லட்சுமி தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற செல்லத்துரை-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் லோகநாயகி அவர்களின் அன்புக் கணவரும் பகீரதன் (பொறியியலாளர், அவுஸ்ரேலியா), சுதர்மினி, சதீசன் (வைத்திய நிபுணர், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மராணி (அவுஸ்ரேலியா), ரஜனி ஆகியோரின் அன்பு மாமனாரும் வீணா (அவுஸ்ரேலியா), விஷ்வா (அவுஸ்ரேலியா), பிறித்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.01.2025) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

392, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 763 2457
021 221 7395

(CR 2220) P-1

# கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் சலவை சேவை செய்வதற்கான கேள்வி கோரல் 2025

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான ஆர்வமுள்ளவர்களிடம் கீழ் குறிப்பிடப்படும் சேவைக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இல | கேள்வி விபரம் | தகைமை | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/DGH/KOC/2025 /SA/01- L | சலவைச் சேவை | கேள்விப்பத்திரத்தில் குறிப்பிட்ட தகைமைகள் | 50,000.00 | 22.03.2025 |

1. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராக இருத்தல் வேண்டும் அத்துடன் அரசாங்க நிறுவனம் ஒன்றிற்கு இடையூறின்றி சேவை வழங்கியிருப்பதோடு மூன்று வருட அனுபவத்துடன் தரவு அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகைமையினை பூர்த்திசெய்தல் வேண்டும்.
2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை மாவட்ட வைத்தியசாலை, A9 வீதி கிளிநொச்சி எனும் இடத்திலிருந்து 08.01.2025 ம் திகதியிலிருந்து 20.01.2025 ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000.00 (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
3. கேள்விகள் 21.01.2025 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் பெறுகை இலக்கத்தினை அதாவது NP/DGH/KOC/2025/SA/01- L என தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமுகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.
4. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி (தொலைபேசி இல-0212284111) எனும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
5. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு இப்பெறுகையினை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.
6. கேள்வி ஆவணமானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 60 நாட்கள் (22.03.2025) வரையும் செல்லுபடியாகும்.
7. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 16.01.2025 திகதி பி.ப 14.30 மணிக்கு, மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி எனும் முகவரியில் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளலாம்.

தலைவர் பெறுகைகள் குழு,
மாவட்ட பொது வைத்தியசாலை,
கிளிநொச்சி.

(CR/44057) J-1

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை : பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் : முத்துக்குமாரு கிருஸ்ணகுமார் பெண் வசந்தி
சபை ஆதனவரி பதிவேட்டின்படி பெயர் : கணபதிப்பிள்ளை பெண் தங்கம்மா
முகவரி : ஆதன இல:25, கேணிக் கட்டு வீதி, பண்டத்தரிப்பு, வட்டாரம் - 04

வட்டாரம் 04, கேணிக்கட்டு வீதி, ஆதன இல.25 இல் அமைந்துள்ள ஆதனம் உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவில்பற்று பண்டத்தரிப்பு இறை "தூப்பிளியவத்தை" எனும் பெயருள்ள நிலப்பரப்பு இரண்டு விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம், பண்டத்தரிப்பு அம்பலவி கணபதிப்பிள்ளை புவனேஸ்வரியும் கணபதிப்பிள்ளை துரைராசாவும் ஆகியோரால் இ.வசந்தசேனன் பிரசித்த நொத்தாரிசு முகதாவில் 4715/2002.06.08 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதிப்பிரகாரம் குறித்த ஆதனத்தின் சட்டப்படி உரித்தாளர்கள் நாமே என வெளிப்படுத்தியுள்ளார்கள்.
பின்னர் பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் 4716/2002.06.08 ஆம் இலக்க அறுதி உறுதிப்பிரகாரம் அப்புத்துரை இராசேந்திரனுக்கும் பெண் அன்னக்கிளிக்கும் வந்தடைந்தது.

பின்னர் பிரசித்த நொத்தாரிசு மு.கதிர்காமநாதன் முகதாவில் 10348/2009.06.06 ஆம் இலக்க சீதன உறுதிப்படி முத்துக்குமாரு கிருஸ்ணகுமார் பெண் வசந்திக்கு வந்தடைந்தது.

**ஆதன விபரம்**
நில அளவையாளர் P.புஸ்பராஜா அவர்களால் வரையப்பட்ட 7421ம் இலக்க 2022.02.06 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 02 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு
**வடக்கு** - கந்தையா தியாகராசாவின் ஆதனம்
**கிழக்கு** - அப்புத்துரை பாலசுந்தரத்தின் ஆதனம்
**மேற்கு** - கேணிக்கட்டு ஒழுங்கை
**தெற்கு** - அப்புத்துரை இராசேந்திரனும் பெண் அன்னக்கிளியும்

மேற்குறித்த ஆதனத்தை முத்துக்குமாரு கிருஸ்ணகுமார் பெண் வசந்தி என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்தேசியத்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்துள்ளது. கடந்த காலங்களில் எதுவுமே இல்லாத 13ஆவது திருத்தத்தைக்கூடத் தருவதற்கு வழங்க மறுத்து வந்த அரசாங்கம் தற்போது உருவாக்கவுள்ள புதிய அரசியலமைப்பை அவசர அவசரமாகக் கொண்டுவந்து ஒற்றையாட்சியை உறுதிப்படுத்தவும், ஒற்றையாட்சிக்குள் தமிழர்களை மட்டுப்படுத்தவுமே வாய்ப்புகள் அதிகம்.

எனவே, அப்படிப்பட்ட முயற்சியை முறியடிப்பதாக இருந்தால் தமிழ்த்தேசியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மட்டத்தில் ஒரு புரிந்துணர்வு ஏற்படுத்தப்படவேண்டும். எமது நிலைப்பாட்டை நாங்கள் ஓரணியில் வெளிப்படுத்தவேண்டும். எனவே, அது தொடர்பான நடவடிக்கைகளுக்காகவும், பேச்சுவார்த்தைகளுக்காகவும் எதிர்வரும் 25ஆம் திகதி, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏதாவது ஒரு பொது இடத்தில் நாங்கள் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம்.

நானும், தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் எஸ்.சிறீதரன், ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் நாடாளுமன்றத்தில் இது தொடர்பில் நடத்திய கலந்துரையாடல்களுக்கு அமைய இந்த முடிவுகளை மேற்கொண்டுள்ளோம்.

இந்தக் கலந்துரையாடலின்போது, மூன்று தரப்புகளும் தாங்கள் விரும்பியபடி கருத்துகளை முன்வைக்கவும், பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவும் முடியும். அவர்கள் சார்பான பிரதிநிதித்துவங்களை உறுதிப்படுத்தவும் அவர்களுக்கு உரிமையுள்ளது. எந்தத் தடையும், நிபந்தனைகளும், கட்டுப்பாடுகளும் இல்லை. நாம் இந்த விடயத்தில் விரைவாகச் செயற்படவேண்டும். கால இழுத்தடிப்பை மேற்கொண்டு அரசாங்கத்துக்கு சந்தர்ப்பங்களை வழங்கக்கூடாது.

வடக்கு - கிழக்கில் 19 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இல்லை. ஆனால், தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உள்ள தமிழரசுக்கட்சி 8 நாடாளுமன்ற உறுப்பினர்களையும், ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி ஒரு நாடாளுமன்ற உறுப்பினரையும், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஒரு நாடாளுமன்ற உறுப்பினரையும் கொண்டுள்ளன. தமிழ்த்தேசியக் கட்சிகளிடம் வடக்கு - கிழக்கின் பெரும்பான்மை உள்ளது என்ற அடிப்படையில் நாம் எமது நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் - என்றார்.

(அ-ம-26-125)

## பாரவூர்தியும்...

அண்மையில் தடுத்து நிறுத்தப்பட்டு சாவகச்சேரி பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்ட சுண்ணக்கல் பாரவூர்தி, அதன் உரிமையாளரின் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரனின் சமர்ப்பணங்களைத்தொடர்ந்துபிணைமுறியில் விடுவிக்கப்பட்டுள்ளது.

பாரவூர்தியின் உரிமையாளர் நகர்த்தல் பத்திரத்தைத் தாக்கல் செய்ததைத் தொடர்ந்து, இந்த வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. பாரவூர்தியில் சட்டவிரோத சுண்ணக்கல் கடத்தல் மேற்கொள்ளப்படவில்லை. கனியவளச் சட்டத்தின் கீழ் புவிச்சரிதவியல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட முறையான அனுமதிப் பத்திரத்துக்கு அமைய சுண்ணக்கற்களை காவுகை செய்ததாக நீதிமன்றத்தின் கவனத்துக்கு பாரவூர்தியின் உரிமையாளரின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

தனியார் நிறுவனம் ஒன்றால் அகழப்பட்ட சுண்ணக்கற்களை சிறிய கற்களாக உடைத்து, அவற்றை காவுகை செய்வதற்கு பிறிதெந்த அனுமதிப்பத்திரங்களைப் பெறவேண்டிய அவசியம் சட்டத்தில் இல்லை என்றும் பாரவூர்தியின் உரிமையாளரின் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன் குறிப்பிட்டார். இதுபோன்ற வழக்குகளில் கெப்பிட்டிக்கொலாவ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் சட்டத்தரணி நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

முறையாக அனுமதிப்பத்திரம் பெற்று கல்லுடைக்கப்பட்ட இடத்தில் இருந்து சுண்ணக்கல் கொள்வனவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டையும் பாரவூர்தியின் உரிமையாளரின் சார்பாக நீதிமன்றத்தின் கவனத்துக்குச் சட்டத்தரணி கொண்டுவந்தார். சமர்ப்பணங்களை ஆராயந்த நீதிவான், 5 லட்சம் ரூபா பிணைமுறியில் பாரவூர்தியையும் அதில் இருந்த சுண்ணக்கற்களையும் விடுவித்தார். அத்துடன், பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைய உடைக்கப்பட்ட சுண்ணக் கற்களைப் பகுப்பாய்வுக்காக அனுப்பவும் நீதிவான் உத்தரவிட்டார்.

'நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், அண்மைக்காலமாக சட்டத்தைக் கையிலெடுத்துச் செயற்படுகின்றனர். பொலிஸார் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை தான்தோன்றித் தனமாக நிறைவேற்றுகின்றனர்' என்றும் சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளார்.

(அ-ம-26)

## வடக்கு...

வடக்கு ரயில் மார்க்கத்துக்கு இரண்டு புதிய ரயில் இயந்திரங்கள் வழங்கப்படும் என்றும், எதிர்வரும் 31ஆம் திகதிக்குப் பின்னர் அவை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் திணைக்களத்தின் கலந்துரையாடலொன்று நேற்று இடம்பெற்றுள்ளது. இதன்போதே, வடக்கு மாகாணத்துக்கு இரண்டு ரயில் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ள விடயத்தை அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை ரயில் திணைக்களத்தால் 74 இயந்திரங்கள் திருத்தல் பணிகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ளன. இவற்றில், 10 ரயில் இயந்திரங்கள் விரைவில் பணியில் ஈடுபடும் வகையில் திருத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. பணிகளின் பின்னர் அவற்றில் இரண்டு ரயில் இயந்திரங்கள் வடக்கு மாகாணத்துக்காக விடுவிக்கப்படும் - என்றார்.

**பின்னணி**

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ஒவ்வொரு நாளும் யாழ்ப்பாணம் கொழும்புக்கு இடையில் ஐந்து சேவைகளும், யாழ்ப்பாணம் அநுராதபுரத்துக்கு இடையில் இரண்டு சேவைகளும் இடம்பெற்று வந்தன. இதன்படி, யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு அதிகாலை 3.45 மணியில் இருந்து இரவு 8.30 மணி வரை ஸ்ரீதேவி, உத்தரதேவி, யாழ்தேவி, கடுகதி மற்றும் தபால் ரயில் என்பன இயக்கப்பட்டன. ஆனால், ரயில் இயந்திரங்கள் இல்லாமை மற்றும் வளப்பற்றாக்குறை காரணமாக, தற்போது யாழ்தேவி மற்றும் கடுகதி ஆகிய இரண்டு சேவைகளே கொழும்புக்கு இயக்கப்படுகின்றன. கடுகதி சேவை வாராந்த சேவையாக மாற்றப்பட்டுள்ள நிலையில், யாழ்தேவி மட்டுமே கொழும்புக்கான தினசரி ரயில் சேவையாக இடம்பெற்று வருகின்றது. இதற்கு பொதுமக்கள் பலரும் விசனம் தெரிவித்திருந்தனர். இவ்வாறானதொரு பின்னணியிலேயே தற்போது இரண்டு ரயில் இயந்திரங்கள் யாழ்ப்பாணத்துக்கு விடுவிக்கப்படவுள்ளன. இதன்மூலம் இரவுநேரத் தபால் சேவைகள் மீள ஆரம்பிக்கப்படும் சாத்தியங்கள் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

(அ-ம-125)

## சுண்ணக்கல்...

இலங்கைப் புவிச் சரிதவியல் திணைக்களத்துக்கு வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் உத்தரவிட்டுள்ளார்.

சுண்ணக்கல் அகழ்வு தொடர்பில் அண்மைய நாள்களாக நிலவும் முறைகேடுகள் தொடர்பில் திணைக்கள ரீதியிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா? என்று வினவியபோது, 'சுண்ணக்கல் அகழ்வுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது' என்று ஆளுநர் தெரிவித்துள்ளார். இந்தப் பிரச்சினை தொடர்பில் குழுவொன்று அமைக்கப்பட்டுத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-ம-125)

## 2024 இல்...

வவுனியா மாவட்டத்தில் 2024ஆம் ஆண்டில் 113 பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர் என்று வவுனியா பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது. அதிகபட்சமாக வவுனியா பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் 82 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

(அ-ம-110-18)

## கடற்படையினரால்...

கடற்படையின் 'P421' என்ற போர்க் கப்பலில் இருந்தே இந்தப் பயிற்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. காலை 9 மணியில் இருந்து மாலை 4 மணிவரை இந்தப்பயிற்சிகள்முன்னெடுக்கப்படவுள்ளன. இலங்கையின் கரையோரக் காவற்படையின் வடக்குப் பிராந்தியப் பணிப்பாளர் யாழ்ப்பாணம் நீரியல்வளத் திணைக்களம் ஊடாக அனைத்து கடற்றொழில் சங்கங்களுக்கும் இது தொடர்பான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

(அ-ம-26-27)

## தேர்தல்...

கட்டுப்பணத்தை மீளச் செலுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## சீனாவின்...

செல்லவுள்ளனர். இவ்வாறானதொரு பின்னணியிலேயே, உலகில் பெரும்சர்ச்சைக்கும்எதிர்ப்புக்கும்உள்ளாகியுள்ள 'ஒரே சீனா' என்ற கொள்கையை ஏற்பதாக அநுர அரசாங்கம் அறிவித்துள்ளது. இலங்கை அரசு 'ஒரே சீனா' என்ற கொள்கையைத்தான் தொடர்ச்சியாகக் கடைப்பிடித்து வந்துள்ளது. எனவே, அந்தக் கொள்கையைத் தொடர்ந்து பேணவும், அதற்கேற்ப வெளிவிவகார நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இலங்கையின் அமைச்சரவை தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களாகவே, தாய்வான் தன்னைத் தனிநாடு என்று அறிவித்து வருகின்றது. தாய்வான் இறைமையுள்ள தேசம் என்று வலியுறுத்தித் தேர்தலில் போட்டியிட்ட தரப்பே வெற்றிபெற்று அங்கு ஆட்சியமைத்துள்ளது. அத்துடன், அமெரிக்காவும், இதர மேற்கு நாடுகளும் தாய்வானை சுதந்திரத் தனிநாடு என்று ஏற்றுக்கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-ம-44)

## விமானக்...

முன்னர் 45 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட யாழ்ப்பாணம் சென்னை இருவழிப் பயணச்சீட்டு தற்போது ஒரு லட்சத்து 38 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விமானப் பயணச்சீட்டின் விலை அதிகரிப்புக்காக ஐயப்ப பக்தர்கள் தமது அதிருப்தியையும் கவலையையும் தெரிவித்துள்ளனர். நேர்த்திக்கடன் செலுத்துவதற்குச் செல்வதற்குத் தாம் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

அரசாங்கம் விமானசேவை நிறுவனங்களிடமிருந்து அறவிடும் வரியை ஜனவரி மாதம் 30ஆம் திகதிவரை குறைப்பதாக அரசாங்கம் கூறியுள்ளது. எனினும், இந்த விலைக்குறைப்பு விமானப் பயணச்சீட்டின் விலைகளில் பெரியளவில் மாற்றங்களை ஏற்படுத்தாது என்று விமானசேவை நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

(அ-ம-6)

## கைவிடப்பட்ட...

பிரதமர் ஹரிணி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2016ஆம் ஆண்டு தொடக்கம் 2020ஆம் ஆண்டுவரை இலங்கையில் 'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதில் பல திட்டங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளன. உண்மையில் நாம் குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் தொடர்பில் மீளாய்வு செய்கின்றோம். பெரும்பாலான பாடசாலைகளில் குறித்த வேலைத்திட்டப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளன. எனவே, முன்னுரிமையின் அடிப்படையில் அந்தப் பணிகளை நிறைவேற்ற நாம் தீர்மானித்துள்ளோம்.

எமது திட்டத்துக்கு அமைய, அனைத்துப் பிள்ளைகளும் மூன்று கிலோமீற்றர் தூரத்துக்குள் கல்விகற்கக்கூடிய வகையில் பாடசாலைகளை வினைத்திறனாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான பாடசாலைகளை இணைத்துக் கொண்டு நடத்திச் செல்லக்கூடிய வகையில் மேல்நிலைப் பாடசாலையொன்றை உருவாக்கவும் நாம் தீர்மானித்துள்ளோம்- என்றார்.

(அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் -கொழும்புக்கு மேலதிக ரயில் சேவைகள்

கொழும்பு, ஜன. 8

கொழும்பு - யாழ்ப்பாணம் இடையே மேலதிகமாக இரு தொடருந்து சேவையை ஆரம்பிக்கவுள்ளதாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீண்டகாலமாக யாழ்.- கொழும்புக்கு ஒரேயொரு தொடருந்து சேவை மட்டும் இடம்பெற்றுவருவதால் மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகியிருந்தனர்.

இது தொடர்பான பல்வேறு முறைப்பாடுகள் பொதுமக்களால் கிடைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக ஆராய்ந்திருந்ததுடன், போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

வேண்டுகோளுக்கமைவாக 15 ஆம் திகதியில் இருந்து ஒரு தொடருந்து சேவையும், 31 ஆம் திகதியில் இருந்து பிறிதொரு தொடருந்து சேவையும் ஆரம்பிக்கப்படும் - என்றார். (ச-இ)

**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் இலத்திரனியல் வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

தொடர்புகளுக்கு :-

074 026 4148

(CS/57148) J-1

## ஐஸ் போதையுடன் ஒருவர் கைது

தருமபுரம்பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐஸ்போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் தருமபுரம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து 95 மில்லிகிராம் ஐஸ்போதைப்பொருள், 12 ஆயிரத்து 800 ரூபா பணம் மற்றும் சந்தேகநபர் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. சந்தேகநபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகதருமபுரம்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்தார். (ச-25, 113)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வடமராட்சி உடுப்பிட்டியில் 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 2 பரப்பாகவும் 3பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- உடுப்பிட்டி சந்நிதி கோயில் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- நல்ல சூழல், நன்னீரூற்று, நிலப்பரப்பு
- பொக்கன் சந்திக்கு அருகாமையில் உடுப்பிட்டி வாசிகசாலை சந்தி 300 மீற்றர் தூரம்
- சந்நிதி முருகன் கோயில் 2 கிலோமீற்றர் கெருடாவில் கந்தசாமி கோயில் 200 மீற்றர் தூரம்.
- வழி இலக்கம் 751 மற்றும் 767 அரச, தனியார் பேருந்து செல்லும் பிரதான காபற் வீதி
- பார்வை நேரம் காலை 8 மணி முதல் மாலை 6.00 மணி வரை.

தொடர்பு:- 070 290 2338
076 017 1105

(CS/2212) J-1

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு



**அமரர் செல்லப்பா தர்மலிங்கம்**

(ஓய்வுபெற்ற பௌதிகவியல் ஆசிரியர், B.Sc
கொழும்பு பல்கலைக்கழகம், Brighton Institute)

காலம் : இன்று (08.01.2025) புதன்கிழமை

நேரம் : முற்பகல் 11.00 am - 1.00 pm, இடம்: "திரு பதி" பிரதான வீதி, வேலணை.

எனது ஆருயிர் தந்தையின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலியில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அன்பு மகள் - Dr Bhanu Janagan
பெறாமகள் - திருமதி மேகலா மனோகரன்
076 668 8423

(CS/57144) J-1

நகையை மீட்டவர் மீது தாக்குதல்

## கைது செய்யப்பட்ட ஐவருக்கும் மறியல்

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ்ப்பாணம் - உரும்பிராய் பகுதியில் உள்ள வெதுப்பகம் ஒன்றில், நிலத்தில் இருந்த நகையை எடுத்து கொடுத்தவர் மீது தாக்குதல் மேற்கொண்ட ஐவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-26)

## புகலிடக்கோரிக்கையாளர்கள்; விரைவில் முடிவு எடுப்போம்!

### அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 8

றொஹிங்கிய புகலிடக்கோரிக்கையாளர்கள் தொடர்பில் தேசியப் பாதுகாப்பு, பிராந்தியப் பாதுகாப்பு மற்றும் மனிதாபிமானம் என்பவற்றைக் கருத்திற்கொண்டே முடிவெடுக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

புகலிடக்கோரிக்கையாளர்கள் தொடர்பில் பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சுகள் இணைந்து செயற்பட்டுவருகின்றன என்றும் தெரிவித்தார். (ச-4544)

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 08 . 1945



மறைவு 05 . 01 . 2025

**விஜயலட்சுமி சின்னத்தம்பி (பவளம்)**

யாழ். நீராவியடியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி, பிரான்ஸ் Torcy ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட விஜயலட்சுமி சின்னத்தம்பி அவர்கள் கடந்த 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பராசக்தி தம்பதியரின் அன்பு மகளும், சின்னையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், சின்னையா சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், சிவகுமாரி (சுவிஸ்), சிவசங்கர் (பிரான்ஸ்), சிவதரன் (லண்டன்), சிவதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயலட்சுமி, காலஞ்சென்ற ஆனந்தராசா, மகாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கோபாலபிள்ளை, பரமேஸ்வரி(தங்கமணி), காலஞ்சென்ற தெய்வானை(செல்லம்) ஆகியோரின் மைத்துனியும், மருமக்களின் அன்பு மாமியாரும், பெறாமக்களின் அன்பு மம்மியும், பேரப்பிள்ளைகளின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை எதிர்வரும் (13.01.2025) திங்கட்கிழமை Pompes funebres PFG LAGNY - SUR - MARNE 96 Rue Saint - Denis, 77400 Lagny - sur - Marne, France என்னும் இடத்தில் மு.ப 09:00 - முற்பகல் 11.00 மணிவரை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக Crematorium des joncherolles villetaneuse 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France என்னும் இடத்தில் நண்பகல் 12.00 - பிற்பகல் 01.15 மணியளவில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:-
சங்கர் - மகன் - +33 762 945 628, +33 174 126 857
குரு - மருமகன் - +33 646 548 500,
கிருஷாந்த் - பேரன் - +33 641 179 718

தகவல்: குடும்பத்தினர்

(CS/2218) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி இல 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org